# ஸ்ரீமத்

# சங்கராசார்யர்

வி. ஆர். ஸ்ரீநிவாஸ அய்யங்கார், பி. ஏ.,

இயற்றியது.

MADRAS:
THE "SWADESAMITRAN" OFFICE

1921

*Copy Right*] *[Price As. 5*

# ஸ்ரீமத் சங்கராசார்யர்.

கொச்சியிலிருந்து சோரனூருக்குப் போகும் ரெயில் பாதையில் ஆல்வாய் என்று ஓர் ஸ்டேஷனுண்டு. அதற்கு முற்காலத்தில் காலடி யென்று பெயர். அந்தக் க்ஷேத்திரத்துத் தலைவனான ராஜசேகரனென்றவன் அவ்விடத்தில் ஓர் கோயிலையும் அக்ரஹாரத்தையும் கட்டினான். அங்கிருந்த ப்ராஹ்மணர்களில் ஒருவராகிய வித்யாதிராஜன் என்பவருக்குச் சிவகுருவென்று ஒரு புத்ரன் பிறந்தார். அவர் மஹாபண்டிதராய்க் காலக்ரமத்தில் விவாஹஞ் செய்து கொண்டு புத்ர ஸந்தானமில்லாமல் ஆலயத்திற்குச் சென்று பரமசிவனை ப்ரார்த்தித்து வந்தார். "லோகத்தில் தர்மம் மெலிந்து அதர்மம் மேலிட்டபொழுது நான் ஸாதுக்களை ரக்ஷிப்பதற்கும் துஷ்டர்களைச் சிக்ஷிப்பதற்கும் தர்மத்தை நிலைநிறுத்துவதற்கும் ஒவ்வொரு யுகத்திலும் அவதாரஞ்செய்கிறேன்" என்ற கீதாவாக்யப்படி, பரமசிவன் அந்த மஹாபுண்

யாத்மாக்களான தம்பதிகளுக்குக் குமாரனாய்ப் பிறக்க நிர்ணயித்தார். அவர் சிவகுருவின் பார்யைக்கு ஸ்வப்பனத்தில் தோன்றி, "மூர்க்கர்களாயும் துஷ்டர்களாயுமிருக்கும் அநேக புத்ரர்கள் உனக்கு வேண்டுமா? அல்லது புருஷோத்தமனான ஒரே புத்ரன் வேண்டுமா" வென்று கேட்டார். அந்த அம்மாள் "ஸ்வாமி! மலைபோன்ற குப்பையைக் காட்டிலும் கடுகுபோன்ற ரத்னமே சிரேஷ்ட" மென்றாள். "ஆனால் இந்தப் புத்ரன் வெகுகாலம் பூமியிலிருக்கமாட்டா"னென்றார். "ஸ்வாமி! மனுஷ்யன் லோகத்தில் செய்யும் கார்யமே அவனுக்கு நிறையல்லது அவன் இருக்கும் காலம் நிறையல்ல" வென்றாள். அப்படியே கலியுகம் 2593-வது வர்ஷமான நந்தன ஸம்வத்ஸரம் (B. C. 509) வைகாசி மாஸம் சுக்லபக்ஷ பஞ்சமி புனர் வஸு நக்ஷத்ரத்தில் கைலாஸபதியான பரமசிவனுடைய அம்சாவதாரமாய் ஓர் திருக்குமாரன் அவதரித்தார்.

[பார்ஸி மதாசார்யரான ஜரதிருஷ்டர், பௌத்தமதாசார்யரான புத்தர், ஜைன மதாசார்யரான மஹாவீரர், அத்வைதமதாசார்யரான சங்கரரென்ற பெயர்கள் அந்தந்த பரம்பரையின் ஆதிபுருஷனையும் அவருக்குப் பின் வந்த பல ஆசார்

யர்களாலும் உபயோகிக்கப் பட்டிருக்கின்றன. ஆகையால் அந்தந்த மத கூடஸ்தர்களைப் பற்றின ஜீவசரித்ர விஷயங்கள் ஆதிபுருஷனைப் பற்றினவையா? அல்லது பின்வந்த ஆசார்யர்களில் ஒருவரைப் பற்றினவையாவென்ற விவாதம் நேருகிறது. அப்படியே சங்கரவிஜயங்களில் சொல்லப்படும் விபரங்கள் எந்த சங்கராசார்யரைப் பற்றினவை யென்று விவாத முண்டு. ஆதிசங்கராசார்யர், அதாவது அத்வைத மதகூடஸ்தரின் காலம், கலியுகம் 2593-2625 (B. C. 509-447) என்று ஒரு பக்ஷம்; A. D. 788-828-என்று இரண்டாவது பக்ஷம்.

1. சிவரஹஸ்யம் லிங்கபுராணம் கூர்மபுராணம் வாயுபுராணம் பவிஷ்யோத்தர புராணம் மார்க்கண்டேயஸம்ஹிதை முதலிய க்ரந்தங்களும், த்வாரகா ஜகன்னாதம் காஞ்சி காமகோடி மட குரு பரம்பரா க்ரமங்களும், இந்தியாவுக்கு வடக்கில் உள்ள திபேத் தேசத்தில் வழங்கும் பௌத்தமத க்ரந்தங்களும், இந்தியாவின் தென் பாகத்தில் பொதிய மலையென்ற அகஸ்த்யாச்ரமவாஸிகளான ஸித்தர்களின் கொள்கையும் ஆதிசங்கரர் B. C. 509-ல் பிறந்தா ரென்பதையே ஆதரிக்கின்றன.

2. நேபாளத்தில் கிடைத்த சிலாசாஸனங்களால் வர்ஷதேவவர்மனென்ற அரசனுடைய காலத்தில் சங்கரர் நேபாளத்திற்குச் சென்று அவனைத் தன் மதத்தில் சேர்த்ததாயும், ஆகையால் அவனுடைய மகனுக்கு சங்கரதேவவர்மனென்று பெயரிட்டதாயும் ஏற்படுகின்றது.

3. மேலும், சங்கரர் கோவிந்தயதியின் சிஷ்யர். அந்த கோவிந்தயதியே பதஞ்ஜலி, யோகஸூத்ரம், மஹாபாஷ்யம், வைத்ய க்ரந்தங்கள் முதலியவற்றை இயற்றினவர். மஹாபாஷ்யமென்ற க்ரந்தம் பாணினியின் வ்யாகரண ஸூத்ரத்திற்கு வ்யாக்யானம். காத்யாயனருடைய வார்த்திகத்திற்கும் பிற்காலத்தில் எழுதப்பட்டது. பாணினியோ கௌதமபுத்தருடையகாலத்திற்கு முந்தியிருந்ததாய் மேற்குத்தேசத்து வித்வான்கள் ஒப்புக்கொள்ளுகிறார்கள். அவருடைய ஸூத்ரங்களுக்கு வார்த்திக மெழுதின காத்யாயனரும் கௌதம புத்தரும் ஒரேகாலத்தி லிருந்தவர்களென்று பௌத்த க்ரந்தங்கள் சொல்லுகின்றன. கௌதம புத்தரோ B. C. 560-வது வருஷத்தில் நிர்வாணத்தை அடைந்தா ரென்றுசொல்லப்படுகிறது. அவர் ஸுமார் B. C. 640-ல் பிறந்தவர். பாணி

ணியோ அதற்கு முந்தினவர். காத்யாயனர் அதே காலத்தில் இருந்திருக்க வேண்டும். புத்தர் பிறந்தபின் வார்த்திகத்தை எழுதியிருக்க வேண்டும். அதற்குப் பிறகே பதஞ்ஜலி மஹாபாஷ்யத்தை எழுதியிருக்க வேண்டும். ஆகையால் அவருடைய சிஷ்யரும் பதஞ்ஜலியின் காலத்திலேயே இருந்திருக்க வேண்டும்.

4. மேலும், ஸூத்ரங்களின் காலம் B. C. 500-ல் முடிந்ததென்று மாக்ஸ் முல்லர் சொல்லுகிறார். யோகஸூத்ரகர்த்தாவான பதஞ்ஜலியும் அதற்கு முந்தியே இருந்திருக்க வேண்டும். ஆகையால் சங்கருடைய ஜனன காலத்தை ஸுமார் B. C. 509 என்று சொல்வதே பொருந்தும்.

5. இரண்டாவது பக்ஷத்தில் A. D. 8-வது நூற்றாண்டில் அவர் பிறந்தாரென்பதற்கு முக்யமான ஆதாரம் யாதெனில் ஸௌந்தர்ய லஹரி யென்ற க்ரந்தத்தில் 75-வது ச்லோகத்தில் 'த்ரவிட சிசு' வென்ற பதம் சைவ ஸமயாசார்யர்களுள் ஒருவரான திருஞான ஸம்பந்தரைக் குறிக்கிற தென்றும் அவருக்குப் பின்பே சங்கராசார்யர் இருக்க வேண்டு மென்றும் சொல்வதே. ஆனல், மலையாளத்தில் சங்கராசார்யருடைய

ஜனனக்ஷேத்ரத்தில் 'த்ரவிடசிசு' வென்ற
பதம் சங்கராசார்யரையே குறிக்கிறதென்று
இப்பொழுதும் வழங்கிவருகிறது. மேலும் லக்ஷ்
மீதரர் ஸௌந்தர்ய லஹரியின் வ்யாக்யானத்தில்
இப்படியே அர்த்தஞ்செய்கிறார். ஆகையால் இந்
தப் பக்ஷமும் சரியல்லை.

ஸகல லோகங்களுக்கும் க்ஷேமத்தையும் மங்
களத்தையும் ஸுகத்தையும் உண்டுபண்ணுகிறவ
ரென்று அர்த்தமுள்ள சங்கரன் என்று அவருக்கு
பெயரிட்டார்கள். (தற்காலத்திலும் திரிச்சூருக்
கடுத்த பழூர்படீன இல்லம் என்ற நம்பூதிரி குடும்
பம் சங்கராசார்யாருடைய தாய் பிறந்த குடும்ப
மென்று எல்லோராலும் கொண்டாடப் படுகிறது.
மேலும், சங்கரர் தன் மாதாவை தஹனம் செய்த
ஸ்தலம்இப்பொழுதும்காட்டப்படுகிறது. மேலும்,
பதரிகாச்ரமத்தில் நரநாராயணர்களுடைய ஆல
யத்தில் அநுதிகாலமாய்ப் பூஜை செய்து வரும்
குருக்கள் நம்பூதிரியாகவே யிருக்கிறார். இந்தக்
காரணங்களால் சங்கரர் கேரளத்தில் பிறந்தவ
ரென்று நிச்சயிக்கலாம்). சிவகுரு தன் புத்ரனுக்கு
விதிப்படி ஸம்ஸ்காரங்களைச் செய்வித்து, ஏழாவது
வயதில் உபநயனத்தை நடத்துவதற்கு முன் சிவ
ஸாயுஜ்யத்தை அடைந்தார். சங்கரர் அதிசீக்ரத்

தில் வேதவேதாந்தங்களையும் இதிஹாஸ புராணங்களையும் சாஸ்த்ரங்களையும் கலைகளையும் அப்யஸித்து ஸம்பூர்ண வித்வானானார். அந்த ஜன்மத்தில் தான் புதிதாய்க் கற்கவேண்டியது ஒன்றுமில்லை யல்லவா? புதிய தேஹத்தை ஸ்வாதீனப்படுத்திக்கொண்டு, தன் அகண்டமானஞானத்தை அதின் மூளையில் பதித்து வெளிப்படுத்துவது மாத்ரமே. இதற்கு வெகுகாலம் வேண்டுவதில்லை.

பிறகு சங்கரர் தகுந்த கன்யையை விவாஹஞ்செய்து கொண்டு வம்சத்தை விருத்தி செய்ய வேண்டு மென்று அவருடைய தாய் எண்ணி, அதற்கு வேண்டியப் ப்ரயத்னங்களைச் செய்து கொண்டிருந்தாள். ஆனால், சங்கரர் தான் வந்த காரியத்தைக் குறைவற முடிக்கக் கருதினவரானகையால், ப்ராஹ்மணனுக்கு அவச்யமான ப்ரஹ்மசர்யத்தையும் வேதாப்யாஸத்தையும் அதி சீக்ரத்தில் முடித்து, கிருஹஸ்தாச்ரமம் அவச்யமில்லை யென்று நிச்சயித்து, ஸந்யாஸத்தைக் கைக்கொண்டு ஸகல லோகங்களுக்கும் பரமஹிதத்தைச் செய்வதில் தாமஸிக்கக்கூடாதென்று நினைத்தார். அதற்குத் தன் தாய் சற்றும் ஸம்மதிக்காததால், பலவிதமாய் அவளை ஸமாதானப்படுத்தி, அவளுடைய ஆக்ஷேபங்களைத் தீர்த்துத்

தான் ஸந்யாஸியானாலும் எந்தக்காலத்தில் அவள் தன்னை நினைப்பாளோ அப்பொழுது தவறாமல் உடனே வந்து சேருவதாயும் அவளுடைய அந்த காலத்தில் தான் ஸமீபத்திலிருந்து அவள் நல்ல கதியை அடைவதற்கு வேண்டிய கார்யங்களைச் செய்து தன் கையால் அவளுக்கு ஸகல உத்தர க்ரியைகளையும் நடத்துவதாயும் ப்ரதிக்ஞை செய்தார். பிற்காலத்தில் அப்படியே நடத்தினார்.

இப்படித் தன் மாதாவிடத்தில் அநுமதி பெற்றுக் கொண்டு கேரள தேசத்திலிருந்து புறப்பட்டு, நர்மதா நதிக்கரையில் கௌட பாதரின் சிஷ்யரான கோவிந்த யோகீந்த்ர ரென்ற மஹாத்மாவின் ஆச்ரமத்தைத் தேடிச் சென்றார். அவரைக்கண்டு நமஸ்கரித்து "ஸ்வாமி! நான் கேரளதேச ப்ராஹ்மணரான சிவகுருவின் புத்ரன், ஶங்கரனென்றுபெயர். என் பிதா எனக்கு உபநயனமாவதற்கு முன்பே சிவஸாயுஜ்யத்தை யடைந்தார். என் மாதாவால் வளர்க்கப்பட்டேன். நான் ஸந்யாஸத்தைப் பெறுவதற்கு அவளிடத்தில் அநுமதி பெற்றிருக்கிறேன். வேதசாஸ்த்ரங்களில் வேண்டிய பரிசயத்தை ஸம்பாதித்திருக்கிறேன். தாங்கள் என்னிடத்தில் க்ருபைசெய்து, என்னைச்சிஷ்யனாக அங்கீகரித்து, எனக்கு ஸந்யா

ஸாத்தை அனுக்ரஹிக்க வேண்டு”மென்று ப்ரார்த்தித்தார். கோவிந்தயதி அவருடைய நிஜஸ்வரூபத்தையும் மஹிமையையும் அறிந்தவராகையால் அதற்கிணங்கி, ராமகிருஷ்ணாதிகளை வஸிஷ்டரும் ஸாந்தீபினியும் சிஷ்யர்களாய்க் கொண்டது போல், மஹாசங்கரரைச் சிஷ்யனாய் ஒப்புக்கொண்டு, கௌடபாதரிடத்திலிருந்து தான் அப்யஸித்த ப்ரஹ்மவித்யையை சங்கரருக்கு லோகமர்யாதைக்காக உபதேசித்தார். பிறகு “நீ காசிக்ஷேத்ரத்திற்குப் போய், அங்கிருந்து ஆர்யாவர்த்தம் முழுவதிலும் யாத்ரைசெய்து, ப்ரஹ்மவித்யையைத் தகுந்த அதிகாரிகளுக்கு உபதேசித்து, அஞ்ஞானத்தாலுண்டான துஷ்ட மதங்களைக் கண்டித்து வைதிகதர்மத்தை நிலைநிறுத்தி, ஸத்யமான ஞானத்தைஉபதேசிக்கும் அநேக க்ரந்தங்களை லோகத்தாருக்கு அனுக்ரஹித்து, உத்தம சிஷ்யர்களைச் சம்பாதித்து அவர்களிடத்தில் மதப்ரவர்த்தன கார்யத்தை ஒப்புவித்து, உன்னிடத்திற்குப் போகக் கடவா” யென்று ஆக்ஞாபித்து ஆசீர்வதித்தனுப்பினார்.

அப்படியே சங்கரர் வாராணஸீ க்ஷேத்ரத்திற்குச் சென்றார். அக்காலத்தில் அது பரம புண்ய க்ஷேத்ரமாயும், மஹாதேவர் விசுவநாத

ரூபியாய் நித்யவாஸஞ் செய்யும் ஸ்தலமாயும், மஹர்ஷிகளாலும் ஞானிகளாலும் யோகிகளாலும் ஸித்தர்களாலும் பண்டிதர்களாலும்அடியார்களாலும் நிறைந்த ஸ்தானமாயும் விளங்கிற்று. சங்கரர் அங்கே வெகுகாலம் வஸித்து, இதரமத வ்யாபகர்களுடன் வாதஞ்செய்து அவர்களுடைய கொள்கைகளைக் கண்டித்து, ஸத் வித்யையை ஸ்தாபித்தார். ப்ரதி தினமும் விச்வநாதருடைய ஸந்நிதியிலும் கங்கையின் கரையிலும் எண்ணிறந்த ஜனங்களுக்கு ஞானத்தையும் கர்மத்தையும் குறித்து உபந்யாஸங்களைச்செய்து, இதரமத ஆபாஸங்களையெடுத்துக்காட்டிக்கண்டித்து, சுத்தமான ஞானத்தின் ஸ்வரூபத்தையும் அதை அடையும்ஸாதனங்களையும் நன்கு விளக்கினார். அவருடைய பால்யமும் அழகும் காந்தியும் தேஜஸும் தைர்யமும் வாக்சாதுர்யமும் அகண்டமான ஞானமும் எல்லோரையும் வசீகரம் செய்யும் தன்மையும் அதிமாநுஷ்யமான ஸித்திகளும் சக்திகளும் ஜனங்களுடைய மனதைக் கவர்ந்து எல்லையற்ற ஆச்சர்யத்தையும் பக்தியையும் உண்டாக்கின. அவருடைய கீர்த்தியும் ப்ரதாபமும் ஸேது முதல் ஹிமாலயம் வரையில் பரவிற்று.

பலவிடங்களிலிருந்து வித்வான்கள் வந்து அவருடன் வாதஞ்செய்து அபஜயமடைந்து அவ

ரைக் குருவாய் அடைந்தார்கள். அவர்களில்சோழ தேசத்திலிருந்து வாராணஸிக்கு வந்து அவரிடத்தில் ஈடுபட்ட பத்மபாதரென்பவரே அவருக்கு ப்ரியசிஷ்யரானார். பிற்காலத்தில் ஸுரேச்வராசார்யர், ஹஸ்தாமலகர், தோடகரென்ற மஹாத்மாக்கள் அவரைச் சரணமடைந்தார்கள். இந்நால்வரே ஸ்ரீ சங்கரபகவத்பாதருடைய ப்ரதான சிஷ்யர்கள். பத்மபாதரிடத்தில் சங்கரர் வைத்திருந்த அபார ப்ரீதியையும் வாத்ஸல்யத்தையும் கண்டு மற்றெல்லோரும் பொறாமை கொண்டதை அறிந்த ஆசார்யர், அவர்களுடைய ஸந்தேஹத்தை நீக்கிப் பத்மபாதரின் மஹிமையை வெளிப்படுத்துவதற்காக, ஒருநாள் தான் கங்கைக் கரையில் நின்றுகொண்டு அக்கரையிலிருந்த பத்மபாதரைத் தன்னிடத்திற்கு வரும்படி ஆக்ஞாபித்தார். குருபக்தியே உருவெடுத்து வந்தது போன்ற அந்த சிஷ்யர், உடனே தயங்காமல் யோசிக்காமல் கங்கையின் ப்ரவாஹத்தின் மேல் உறுதியான பூமியில் நடப்பதைப்போல் நடந்து வந்தாரென்றும், அவர் அடிவைத்த விடங்களிலெல்லாம் ஓர் தாமரை மலர்ந்ததென்றும் சொல்வதுண்டு. ஆகையால் அவருக்குப் பத்மபாதரென்று பெயர் வாய்ந்தது.

காசிக்ஷேத்ரத்தில் சங்கராசார்யர் சில காலமிருந்து அநேக மதக்ரந்தங்களை இயற்றினர். தசச்லோகி, விவேக சூடாமணி, ஹரிமீடேஸ்தவம், ஆத்மபோதம், உபதேசஸாஹஸ்ரீ, அநேக பஞ்சகங்கள், அஷ்டகங்கள், ஸ்தோத்ரங்கள், விஷ்ணுஸஹஸ்ரநாம பாஷ்யம், பகவத்கீதா பாஷ்யம், ப்ரதானமான உபநிஷத்துகளின் பாஷ்யம், வேதாந்தஸூத்ரபாஷ்யமென்ற நூல்கள் அவரால் அக்காலத்தில் செய்யப்பட்டன.

ஒருநாள் ஆசார்யார் சிஷ்யர்களுடன் மாத்யாஹ்னிக ஸ்நானஞ் செய்யக் கங்கைக்குப் போய்க் கொண்டிருக்கையில், ஓர் சண்டாளன் எதிரில் வரக் கண்டு, சிஷ்யர்கள் அவனைத் தூரத்தில் விலகி நிற்கும்படி கூச்சலிட்டார்கள். அதற்கு அவன் ஆசார்யரை நோக்கி வணங்கி, "ஸ்வாமி! தாங்கள் உபதேசிக்கும் அத்வைத மதத்திற்கும் அநுஷ்டானத்திற்கும் வெகு தூரமிருக்கிறதே! நம்மிருவரின் தேஹத்தைக்கவனித்தால் அது அன்னமய, ப்ராணமய, மனோமய, விக்ஞானமய, ஆனந்தமயமென்ற ஐந்து கோசங்களால் அமைக்கப்பட்டதே. அதில் யாதொரு பேதமுமில்லை. அல்லது உபாதிகளைத் தள்ளி அவைகளில் விளங்கும் ஜீவசைதன்யத்தைக் கவனித்

னால் ஜீவன்களுக்குள் யாதொரு பேதத்தையும் காணமுடியாதே. ஆகையால் யாரைப் பார்த்து யார் தூரத்தில் விலகென்று சொன்னது? இதை எனக்கு விளக்கவேண்டு" மென்றான். அதைக்கேட்ட ஆசார்யார் சற்று யோசித்து, ஞானதிருஷ்டியால் தன்னைப் பரிக்ஷிக்கவந்த சிவபெருமானே அர்சண்டான வடிவம் கொண்டாரென்றறிந்து அவனை வணங்கி, "ஜகத்தை மாயையாயும் ப்ரஹ்மத்தை ஸத்யமாயும் இப்படி ஸாக்ஷாத்கரிக்கும் புருஷன் ப்ராஹ்மணனாயிருந்தாலும் சரி, சண்டாளனாயிருந்தாலும் சரி, அவனே என் குரு. இதுவென் நிச்சயமான முடி"வென்றுரைக்கும் மனீஷா பஞ்சகமென்ற ஐந்து ச்லோகங்களைச் செய்தார்.

இப்படியே வேறொரு ஸமயத்தில் பொழுது விடிவதற்கு முன் கங்காஸ்நானத்திற்குப் போய்க்கொண்டிருக்கையில், ஓர் வீட்டுத் திண்ணையில் ஒரு வித்யார்த்தி பாணினி ஸூத்ரங்களை மனப்பாடஞ் செய்துகொண்டிருப்பதை வெகுநாளாய்க் கவனித்துவந்த ஆசார்யார், அவனுடைய ஆயுள் விறைவதைக்கண்டு "அறிவு கெட்டவனே! இந்தப்ராரப்த தேஹம் அழியுங்காலத்தில் யமதூதர்கள் உன்னைக் பிடித்துக் கட்டி ஹிம்ஸித்துக் கொண்டுபோகும்

பொழுது, நீ ஆயுஸ் முழுதும் பயின்று வந்த இந்தப் பாணினீ ஸூத்ரங்கள் உன்னைக் காப்பாற்றுமோ? அவர்களுடைய கையிலிருந்து விடுவிக்குமோ? ஒருநாளுமில்லை. ஆகையால் ஸமஸ்த துக்க நிவாரகனையும், ஸகல மங்களத்தையும் இஹத்திலும் பரத்திலும் கொடுக்கிறவனையுமிருக்கும் கோவிந்தனிடத்தில் பக்தி செய்பக்கடவா" யென்று ஆரம்பிக்கும் பஜகோவிந்த மென்ற பன்னிரண்டு ச்லோகங்கள் அடங்கிய சிறு நூலைச் செய்தார்.

இப்படித் தன் சிஷ்யர்களுக்கும் மற்றவர்களுக்கும் அத்வைத மதக்கொள்கைகளை உபதேசித்துக்கொண்டும், அவைகளை விளக்கும் க்ரந்தங்களைச் செய்துகொண்டும், அவைகளைப் பல பண்டிதர்களுக்கும் வித்வான்களுக்கும் காட்டி அவர்களால் சொல்லப்படும் ஆக்ஷேபங்களுக்கு ஸமாதானங்களையும் அவைகளிலடக்கி, ஸௌரம், காபாலிகம், காணபத்யம், பைரவம், காளிகம், பாஷண்டம், சாக்தம் முதலிய மதங்களின் ஆபாஸங்களையும் கண்டித்துச் சீர்திருத்திக்கொண்டும், வாராணஸியில் அவர் வஸித்துவந்தார். சில ஸமயங்களில் பதரிகாச்ரமத்திற்குப் போய் வருவது

மூண்டு. வேதாந்த ஸூத்ரங்களைச் செய்தவ்யாஸ பகவான் ப்ராஹ்மண வடிவங்கொண்டு ஒரு நாள் அவரிடத்தில் வந்து ஸூத்ரபாஷ்யத்தைப்பற்றி வாதஞ்செய்ததாகவும் ஒரு வாரம் வரையில் ஒருவரும் சளைக்காததால் பத்மபாதர் குறுக்கிட்டு "மஹாவிஷ்ணு பரமசிவன் இவர்களுடைய அம்சாவதாரங்களான தாங்கள் இப்படி விவாதம் செய்யக்கூடாதெ"ன்று ப்ரார்த்தித்ததாகவும் சொல்லுகிறார்கள்; இதனால் அக்காலத்தில் ஆசார்யருடைய பாஷ்யத்தைப் பண்டிதர்களும் வித்வான்களும் அவ்வளவு ஸுலபமாய் ஒப்புக்கொள்ளவில்லையென்றும் வெகுகாலம் வரையில் கடுமையான ஆக்ஷேபங்கள் செய்யப்பட்டனவென்றும் தெரிகிறது.

இப்படித் தன் அவதார கார்யத்தில் முக்யமான பாகத்தை முடித்து, அத்வைதத்தை ஸ்தாபிக்கும் க்ரந்தங்களைச் செய்து சிஷ்யர்களுக்கு உபதேசித்துப் பண்டிதர்களுடைய பரிசீலனைக்குட்படுத்தி, தான் இனி அத்வைத மதப்ரசாரத்தையும் துஷ்டமத கண்டனத்தையும் ஆர்யாவர்த்தம் முழுவதிலும் செய்யவேண்டுமென்று கருதி, அநேக சிஷ்யர்களுடனும் க்ரந்தங்களுட

னும் காசியிலிருந்து திக்விஜயம் செய்யப்புறப்பட்டார். அங்கங்குள்ள அரசர்களை தன்வித்தையாலும்மஹிமையாலும் நடத்தையாலும்வசப்படுத்தி கைலனைகார்யங்களையும் சம்பாதித்துக்கொண்டு அவர்களின் மூலமாய் அத்வைத மதத்தைத்தேசமெங்கும் பரவச்செய்தார். அப்பொழுது அவருக்கு 25 வயதிருக்கலாம். கங்கையும் யமுனையும் சேருமிடத்தில் அவர் தங்கியிருந்தபொழுது பூர்வமீமாம்ஸா சாஸ்த்ர நிபுணரான குமரில பட்டர் உயிர் துறக்கப்போகிறாரென்ற ஸமாசாரத்தைக் கேள்வியுற்றார். (பட்டர் அஸ்ஸாம் தேசத்துப் ப்ராஹ்மணனென்றும், பால்யத்தில் வேத சாஸ்த்ரங்களைக் கற்றுப் பௌத்த ஸந்யாஸியின்வேஷந் தரித்து அந்தமதக்கொள்கைகளை அறியவிரும்பி ஓர் ப்ரஸித்தபௌத்த குருவிடத்தில்வெகுகாலம் சிஷ்யராயிருந்தாரென்றும், ஒருநாள் வைதிகமதத்தை அவர் விசேஷமாய்க் கண்டித்ததைப் பொறுக்காமல் தான் கொதிப்புடன் சொன்னபதிலால் அவர்கள் தன்னைக் கண்டுபிடித்துக்கொண்டார்களென்றறிந்து உயிர்தப்பி ஓடிவிட்டாரென்றும், ஸுதன்வாவென்ற அரசனை அண்டி அவனுடைய உதவியால் பௌத்தர்களை வாதத்தில் வென்று

அவனை வசப்படுத்தி ஹிமாலயம் முதல் ஸேது வரையிலுள்ள பௌத்தர்களை வேரறுக்கும்படி அவனுக்கு உபதேசித்தாரென்றும் வித்யாரண்யர் சங்கர விஜயத்தில் சொல்லுகிறார். இப்படி நடந்திருக்காதென்று நாம் எண்ண ந்யாயமுண்டு. பௌத்தர்களை வாதத்தில் ஜயிக்காமல் தான் அதி மானுஷ்ய கார்யங்களை யோகபலத்தால் செய்து, பௌத்தர்கள் அப்படிச்செய்ய முடியாமல் போன பொழுது ஸுதன்வா அதைக் கண்டு அவருக்கு வசப்பட்டானென்று மேற் சொன்ன நூலால் விளங்குகிறது. மேலும், ஸேதுமுதல் ஹிமாலயம் வரையில் ஏகசக்ராதிபதியாய் ஓர் அரசனும் அக்காலத்தில் ஆண்டுவந்ததாகத் தெரியவில்லை. மேலும் ஸுதன்வாவென்ற அரசனைப்பற்றி நமக்கு யாதொன்றும் விவரம் கிடைக்கவில்லை. மேலும் இவ்வரசன் ஒரு சமயத்தில் கபாலிக மதத்தார்களின் கூட்டத்திற்குப் பயந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முடியாமல் ஓடிப் போனானென்று தெரிகிறது. இந்தியாவில் மதத் வேஷமும் சண்டையும் இல்லையென்று சொல்ல முடியாது. ஆயினும் மதத்திற்காக ஆயிரக்கணக் காய் கொலைசெய்வதும் சித்ரவதைசெய்வதும் இந்தியர்களின் ஸ்வபாவத்திற்கே முற்றிலும் விரோ

தம். அந்த வழக்கம் மகம்மதியர்கள் இந்தியாவில் வந்தபிறகே ஏற்பட்டதாகத் தெரிகிறது. சங்கரா சார்யார் அதிவேகமாய்ப் பட்டர் இருக்கும் ருத்ர புரத்திற்குச் சென்று பார்க்கையில், குமரிலர் ஓர் பெரிய சிதையைத் தயார்செய்து அதில் ஏறும் ஸமயத்திலிருந்தார். அப்பொழுது தான் வந்திருப்பதாய் ஆசார்யர் தெரிவித்து "நீங்கள் அகாலத்தில் இப்படி ப்ராணத்யாகம் செய்யும் காரண மென்ன" வென்று கேட்க, பட்டர் "என்னுடைய மதத்தை விருத்தி செய்வதில் இரண்டு மஹாபாபங்களைப் புத்திபூர்வகமாய்ச் செய்திருக்கிறேன். முதலாவது, எனக்கு ஆசாரியனாயிருந்த பௌத்த ஸந்யாஸியைக் கொல்லுவித்தேன்; இரண்டாவது வேதங்கள் தாமே ப்ரமாணம், மற்றவைகளுக்கும் ப்ரமாணமென்று ஸ்தாபித்ததில் வைதிகக்ரியைகளே மோக்ஷஸாதன மென்றும், ஈச்வரனுடைய ஸஹாயம் வேண்டுவதில்லையென்றும், ஈசுவரனுடைய மஹிமையை ஒழித்து கேவலம் நாஸ்திக வாதம் போன்ற ஸித்தாந்தத்தைச் செய்தேன். இவ்விரண்டு பாபங்களுக்கு அக்கினியில் விழுந்து ப்ராணனை விடுவதே தகுந்த ப்ராயச்சித்தமென்று ஸ்மிருதிகள் விதிக்கின்றன" வென்றார்! அதைக் கேட்ட

ஆசார்யார் மிகவும் வருந்தி "உங்களுடன் சாஸ்த்ரவாதஞ்செய்து மீமாம்ஸாமதத்தைக்கண்டித்து அத்வைத மதத்தை ஒப்புக்கொள்ளும்படி உங்களைச் செய்ய வேண்டு மென்று வந்தேன்" னெனக், குமரிலர், "இப்பொழுது அதற்கு ஸமயமல்ல; மகதராஜ்யத்தின் ராஜதானியான மாஹிஷ்மதியில்மண்டனமிச்ரரென்று ஓர் வித்வானிருக்கிறார். அவர் என் ஸஹோதரியை விவாஹஞ்செய்தவர். கர்மமார்க்கத்தில் ஈடுபட்டவர், சாஸ்த்ரஞானத்திலும் வாதத்திலும் எனக்கு ஸமமானவர். நீர் அவரைத் தேடிப்போய் வேண்டிய வரையில் அவருடன் வாதஞ்செய்யும். அவரை ஜயித்தால் என்னை ஜயித்தது போலாகு" மென்று அக்னிப்ரவேசஞ் செய்தார்.

பிறகு சங்கரர் பிரயாகையிலிருந்து மாஹிஷ்மதி நகரத்திற்குச்சென்று, அங்கே அரசனுடைய ஸபையில் வெகு செல்வாக்குடன் விளங்கிவரும் ஆஸ்தான பண்டிதரான மண்டனமிச்ரரை சாஸ்த்ர வாதத்திற்கு அழைத்தார். அவர்வேதங்களில் கர்மகாண்டத்தையேமுக்ய ப்ரமாணமாய்க்கொண்டவர்; ஆகையால் ஸந்யாஸிகளை வெறுப்பவர்; புதிதாய் சங்கரரால் ப்ரசாரம் செய்யப்பட்ட மதத்தை வேரறுப்பதற்கு அதே நல்ல ஸமயமென்று

கருதி அவருடன் வாதஞ் செய்ய ஸம்மதித்தார். அவருடைய பார்யை ஸரஸ்வதியின் அவதார மென்று சொல்லப்படுகிறது. இவ்விருவருக்கும் அவளையே மத்யஸ்தராய் வைத்துப் பல நாள்கள் வரையில் வாதஞ்செய்தார்கள். முடிவில் மண்டனமிச்ரர் தோற்றார். வாத நியமத்தின்படி தான் கிருஹாஸ்தாச்ரமத்தை விட்டு ஸந்யாஸியாய்ச்சங்கரருக்குச் சிஷ்யரானார். அப்பொழுது அவருடைய பார்யை குறுக்கிட்டுச்சங்கரருடன் சாஸ்த்ர வாதம் செய்ய ஆரம்பித்தாள். லௌகிக வைதிக சாஸ்த்ரங்களில்அவரை அசைக்க முடியாதென்று கண்டு அவர் பால்யத்திலேயே ஸந்யாஸம் பெற்றவராதலால் அவருக்குத் தெரியாத சிருங்கார சாஸ்த்ரத்தில் அவள் அவரைக்கேள்விகள் கேட்க ஆரம்பித்தாள். அப்பொழுது சங்கரர் அதைஎதிர்பார்க்காதவரானதால் சற்றுத் தயங்கி, தனக்கு ஒருமாஸம் தவணை கொடுக்கும்படி வேண்டிக் கொண்டு, அங்கிருந்து நர்மதாநதிக்கரைக்கு வந்து ஒரு மரப்பொந்தில் தன் தேஹத்தை விட்டு சிஷ்யர்களைக் காவல் வைத்துத், தன் யோக சக்தியால் அதிலிருந்து கிளம்பி, அக்காலத்தில் உயிரிழந்த அமருகனென்ற அரசனுடைய தேஹத்தில் ப்ரவேசித்தார். பிறகு ஒரு மாஸம் வரையில்

அவ்வரசனுடைய அந்தப்புரத்தில் வஸித்துத் தான் அறிந்து கொள்ள வேண்டியதைக் குறைவறத் தெரிந்து கொண்டார். அவருடைய நடத்தையால் முன்னிருந்த அரசனல்லவென்று கண்டு கொண்ட ராஜமஹிஷி, வேறு யாரோ மஹா புருஷன் அந்தத்தேஹத்தில் ப்ரவேசித்தானென்று ஸந்தேகித்து, மறுபடியும் அதை விட்டு அவர் போகாவண்ணம் நாடெங்கும் ஜாக்ரதையாய்த் தேடி, ஸந்யாஸி யோகி ஸித்தன் முதலியவர்களின் உயிரற்ற தேஹம் எங்கிருந்தாலும் கண்டு பிடித்துத் தஹனம்செய்யும்படி மந்திரிகளுக்கு ரகஸ்யமாய்க் கட்டளை யிட்டாள். அப்படிச் செய்யப்பட்டபொழுது சங்கராசார்யரின் சிஷ்யர்கள் பயந்து, குருவின் தேஹம் எரிக்கப்பட்டால் மறுபடியும் அவர் அதில் வந்து ப்ரவேசிக்க முடியாதென்றறிந்து, தங்களில் சிலரைப் பாம்புப்பிடாரர்களைப்போல் வேஷம் தரிக்கச்செய்து, அமருகனுடைய ஸபைக்குச் சென்று அங்கே பாம்பாட்டுவதுபோல் அபிநயித்து அதற்கேற்ற பாடல்களைப் பாடினார்கள். அவைகளின் உட்கருத்தை அறிந்த ஆசார்யர் தன் தேஹத்திற்குநேரும் அபாயத்தை யறிந்து உடனே அதில் வந்து ப்ரவேசித்தார். பிறகு ஸரஸ்வதியிடத்திற்குச் சென்று அவள்

ஓர் பெரிய கிணறு இப்பொழுதும் திருவஹீந்த்ர புரத்தில் எல்லாருக்கும் காட்டப்படுகிறதல்லவா?

இந்த மண்டனமிச்ரர் ஸந்யாஸம் பூண்டபொழுது ஸுரேஸ்வராசார்யரென்று பெயர் பெற்றார். பிறகு ஸ்ரீமத் சங்கராசார்யார் தக்ஷிணத்தில் யாத்ரைசெய்து, மஹாராஷ்ட்ர தேசமெங்கும் அத்வைதமதத்தை உபந்யஸித்து இதர மதங்களின் துஷ்டகிருத்யங்களைக் கண்டித்துத், தான் போகக்கூடாத விடங்களிலெல்லாம் தன் சிஷ்யர்களை அனுப்பி மதப்ரசாரம் செய்தார். அக்காலத்தில் விளங்கின மதங்கள் பலவும் வேத வாக்யங்களையே ஆதாரமாய்க் கொண்டவை. எப்படியாவது வேதத்தில் தங்களுக்கு இடங் கிடைக்க வேண்டுமென்று ச்ருதிகளை ஒடித்து முறித்து வளைத்துத் தங்களுக்கனுகூலமாக அர்த்தஞ்செய்து கொண்டவை. ருத்ரனைப்பற்றி ஸ்தோத்ரஞ்செய்யும் ஓரிடத்தில் "ச்வப்ய ச்வ பதிப்யச்ச வோ நமோ நம:" என்றிருக்கிறது. அதற்கு நாய்களும் நாய்களுக்குப் பதியுமான உமக்கு நமஸ்காரம்" என்று தாத்பர்யம். இந்த வாக்யத்தை ஆதாரமாய் வைத்துக்கொண்டு மஹாராஷ்ட்ரத்தில் ஓர் வகுப்பு ப்ராஹ்மணர்கள் பரமசிவனை மல்லாரியென்று பெயர்வைத்து அவருக்கு

வாஹனமான நாயை தைவமாய் ஆராதித்துவந் தார்களென்பது இதற்கு ஓர் விசித்ரமான அடையாளம்.

காபாலிகர்களென்ற மதத்தினர் மங்கள மூர்த்தியாயும் சாந்தஸ்வரூபியாயுமிருக்கும் ஸதா சிவத்தைக் காலபைரவ மூர்த்தியாய் ஸம்ஹார ரூபியாய்ப் பூஜித்துவந்தார்கள். சிவபெருமான் மயானத்தில் வஸிக்கிறாரென்றும், சுடலைச் சாம்பலைத் தரிக்கிறாரென்றும், மனுஷ்யர்களின் தலைகளைக் கோர்த்து மாலைகளா யணிகிறாரென்றும், மனுஷ்ய கபாலத்தை(மண்டையோட்டை)பிக்ஷா பாத்ரமாய்க் கையில் வைத்துக்கொண்டிருக்கிறாரென்றும் வர்ணிக்கப்படுவதை அத்யாத்மமாயும் ரூபகமாயும் அர்த்தஞ்செய்யாமல், வெளிப்படையாயுள்ள அர்த்தத்தையே நிஜமாய்க்கொண்டு, ஞானத்தாலும் ஆசாரத்தாலும் மேன்மைவாய்ந்த ப்ராஹ்மணர்களின் தலைகளை அறுத்து ரக்தம் பெருகப் பலிகொடுப்பதே பரமசிவனுக்கு ப்ரியமான பூஜையென்று அவர்கள் நிஜமாய் நம்பி அப்படியே அனுஷ்டித்துவந்தார்கள். மஹாராஷ்ட்ர ப்ராஹ்மணர்களில் ஓர் வகுப்பினரான காராடிகள் காசிக்கு யாத்ரைசெய்யும் ப்ரயாணிகளைப் பல உபாயங்களால் மோசஞ் செய்து வசப்படுத்தி

ஒரு வர்ஷம் வரையில் உபசாரஞ்செய்து அன்ன பானங்களால் கொழுத்தவுடன் காளிக்கு தஸ்ரா ஸமயத்தில் பலிகொடுத்து வந்தார்கள். அது இப்பொழுதும் பங்காளத்தில் ரஹஸ்யமாய் நடந்துவருகிறதென்று சொல்லுகிறார்கள். ஓர் காபாலிகன் சங்கரரிடத்தில் வந்து "உமது அத்வைத மதப்படி தேஹம் மாயையல்லவா? அது இருந்தாலென்ன, போனாலென்ன? உமக்கு நஷ்டமில்லை. மனுஷ்யோத்தமனை உமது தலையை நான் பைரவனுக்குப் பலிகொடுத்தால் எனக்கு மோக்ஷம் கிடைக்கும். ஆகையால் அந்தப் பரமோபகாரத்தைச்செய்யவேண்டு" மென்று ப்ரார்த்தித்தான். ஆசார்யர் "அப்படியேசெய்கிறேன் ஆனால் என்னைப்போல் என் சிஷ்யர்களுக்கு அத்வைத ஞானம் இன்னும் அனுஷ்டானத்தில் வரவில்லை ஆகையால் அவர்களில்லாத ஸமயத்தில் ரஹஸ்யமாய் நீவந்து என் தலையைக் கொண்டுபோவெ"ன்றார். தன்னால்பிறருக்கு ஸ்வல்ப உபகாரம் செய்யக்கூடியதாயிருந்தாலும் அதை ஸந்தோஷமாயும் மனப்பூர்வமாயும் செய்து அவ்விஷயத்தில் தன் தேஹத்தையும் உயிரையும் துரும்பாய் நினைத்து விடும் மஹாபுருஷனென்று இதனால் நன்கு விளங்குகிறது. அந்தக் காபாலிகன் அப்படியே

ரகஸ்யமாய் வந்து அவருடைய தலையை அறுக்கப் போகும் ஸமயத்தில் வெளியில் போயிருந்தபத்மபாதர் திடீரென்று அங்கே வந்து அந்தக் காபாலிகன்மேல் பாய்ந்து அவனுடைய கத்தியைப் பிடுங்கி அவனைக் கண்டதுண்டமாய் வெட்டிவிட்டார்.

பிறகு ஆசார்யர் துங்கபத்ரா தீரத்தில் சிருங்ககிரியென்ற (ரிஷ்யசிருங்கருடைய வாஸஸ்தலம்) விடத்திற்குச் சென்று, அங்கே ஒரு மடத்தை ஸ்தாபித்து, மண்டனமிச்ரருடைய பார்யையான ஸரஸ்வதியை அதற்குத் தேவதையாயும்பிருதிவீதரரென்ற சிஷ்யரை மடாதிபதியாயும் நியமித்து, அங்கே, தான் கைலாஸத்திலிருந்து கொண்டுவந்த ஐந்து லிங்கங்களில் ஒன்றாகிய போகலிங்கத்தை ஸ்தாபித்தார். பிருதிவீதரரென்ற சிஷ்யர் இங்கே வைக்கப்பட்டாரென்று கும்பகோணமட குருபரம்பரையில் சொல்லப்படுகிறது. அது தக்ஷிணாம்நாயம், சாரதாபீடம், ராமக்ஷேத்ரம், துங்கபத்ரா தீர்த்தம், வராஹ தேவதை, சாரதா சக்தி, கிருஷ்ண யஜுர்வேதம், பூரிவார ஸம்ப்ரதாயம், பாரதியென்ற ஸந்யாஸநாமம், சைதன்ய ப்ரஹ்மசாரி, அஹம் ப்ரஹ்மாஸ்மி யென்ற மஹாவாக்யமுள்ளது.

பிறகு சிதம்பரத்திற்குச் சென்று அங்கே மோக்ஷலிங்கத்தை ஸ்தாபித்தார். தான்

லோகத்தில் இருக்கவேண்டிய காலம் குறு கினதால் மறுபடியும் இந்தியா முழுவதிலும் யாத்திரை செய்ய நினைத்து, ராமேச்வரத்திற்குச் சென்று ஸேதுஸ்நானம் செய்து திரும்புங் காலையில், திருச்சிராப்பள்ளிக்கடுத்த ஜம்புகேச்வர (திருவானைக்காவல்)த்தில் தேவியின் உக்ரமான சக்தியைத் தணித்து ஸ்ரீசக்ரத்தை அகிலாண்டேச்வரியின் காதில் தாடங்கமென்ற ஆபரணரூபமாய் வைத்தார். அங்கிருந்து வடக்கில் பதரிநாராயணத்திற்குச் சென்று அங்கே ஓர் மடத்தை ஏற்படுத்தி அதற்குத் தோடகாசாரிய (ஆனந்தகிரி)யென்ற தன்சிஷ்யரை அதிபதியாய் நியமித்தார். அது உத்தராம்னயம், பூர்ணகிரி பீடம், ஜ்யோதிர்மடம், பதரிகாச்ரம க்ஷேத்ரம், அலகநந்தா தீர்த்தம், நாராயண தேவதை, பூர்ணகிரி சக்தி, அதர்வணவேதம், ஆனந்தவார ஸம்ப்ரதாயம், கிரியென்ற ஸந்யாஸநாமம், ஆனந்த ப்ரஹ்மசாரி, அயமாத்மா ப்ரஹ்ம வென்ற மஹா வாக்யம் பொருந்தினது. கேதார க்ஷேத்ரத்தில் முக்திலிங்கத்தையும் நேபாளதேசத்தில் வரலிங்கத்தையும் வைத்தார். அங்கிருந்து அயோத்யையின் வழியாய் த்வாரகைக்குச் சென்று அங்கே ஓர் மடத்தை ஏற்படுத்தி அதற்கு ஹஸ்

தாமலகரென்ற சிஷ்யரைத் தலைவராக நியமித்தார். அது பச்சிமாம்நாயம், காளிகாபீடம், சாரதா மடம், த்வாரவதி க்ஷேத்ரம், கோமதீ தீர்த்தம், ஸித்தேச்வர தேவதை, பத்ரகாளிசக்தி, ஸாம வேதம், கோடிவார ஸம்ப்ரதாயம், ஆச்ரமியென்ற ஸந்யாஸ நாமம், ஸ்வரூப ப்ரஹ்மசாரி, தத்வமஸி யென்ற மஹாவாக்யம் பொருந்தினது. பிறகு கோகுல ப்ருந்தாவனம் முதலிய க்ஷேத்ரங்களைத் தர்சித்துக்கொண்டு கிழக்கு சமுத்ரக்கரை (மஹோததி)க்கு வந்து அங்கே ஓர் மடத்தை ஏற்படுத்தி அதற்குத் தலைவராக பத்மபாதரை நியமித்தார். அது பூர்வாம்நாயம், விமலாபீடம், கோவர்த்தன மடம், ஜகன்நாதக்ஷேத்ரம், மஹோததி தீர்த்தம், புருஷோத்தம தேவதை, விமலா தேவி சக்தி, சுக்ல யஜுர்வேதம், போகவார ஸம்ப்ரதாயம், அரண்யரென்ற ஸந்யாஸ நாமம், ப்ரகாச ப்ரஹ்மசாரி, ப்ரக்ஞானம் ப்ரஹ்மவென்ற மஹா வாக்யமுள்ளது. இப்படிகன்யாகுமரிமுதல் ஹிமாலயம் வரையிலும் ரத்னாகரம்(மேற்குஸமுத்ரம்) முதல்மஹோததிவரையிலுமுள்ளதேசமெங்கும் யாத்ரைசெய்து, சீரழிந்த மதங்களைச் சீர்படுத்தி, அம்மத பண்டிதர்களுடன் வாதஞ் செய்து ஜயித்துத் தன் அத்வைத மதத்தை

எடுத்துரைத்து ஸ்தாபித்துப், பழைய தேவாலயங்களிலுள்ள குறைகளை நீக்கி சுத்தமான ஸம்ப்ரதாயத்தையும் பூஜையையும் ஏற்படுத்திப் பல புதிய தேவாலயங்களை அமைத்துத் தான் கைலாஸத்திலிருந்து கொண்டுவந்த ஐந்து லிங்கங்களில் நான்கை முக்யமான க்ஷேத்ரங்களில் வைத்து, ஆர்ய பூமிக்கு ரக்ஷபாலகர்களாய் வடக்கில் பதரி மடத்தையும் கிழக்கில் ஜகன்னாத மடத்தையும் தெற்கில் ச்ருங்ககிரி மடத்தையும் மேற்கில் த்வாரகா மடத்தையும் ஸ்தாபித்துத், தன் மதத்தைக் காலமுள்ள வரையில் ப்ரசாரம் செய்வதற்குத் தகுந்த சிஷ்ய பரம்பரையையும் உண்டாக்கி லோகோத்தமமான க்ரந்தங்களை இயற்றி, முடிவில் ஸ்ரீவித்யைக்கு வாஸஸ்தானமான காஞ்சிபுரத்திற்கு வந்தார். அங்கே காமாக்ஷி தேவியின் உக்ர கலையைக் கருணையாய் மாற்றி, அவளுடைய ஆலயத்தில் பூப்ரஸ்தார ரூபமான ஸ்ரீசக்ரத்தைக் காமகோடி பீடமாய் ஸ்தாபித்தார். பிறகு அங்கே தான் ஸர்வக்ஞ பீடத்திலிவீற்றிருந்து, அத்வைத மதஸ்தாபனத்திற்காகத் தான் பூமியில் அவதரித்த காயத்தை முடித்ததை லோகத்திற்கு வெளிப்படுத்தினார். காஞ்சி நகரத்தையும் ஸ்ரீசக்ர ரூபமாய் புதுப்பித்து, ஆலயத்தையும் விக்ரஹத்தை

யும் அதின் பிந்துஸ்தானத்தில் வைத்து, மற்ற ஆலயங்கள் யாவும் அதை நோக்கியிருக்கும்படி அமைத்தார். அந்த காமகோடிபீடம்மௌலாம்னாயம், சாரதாமடம், ஸ்ரீசங்கர பகவத்பாதரே ஆசார்யர், ஸத்யவ்ரத காஞ்சி க்ஷேத்ரம், கம்பாதீர்த்தம், ஏகாம்பரநாத தேவதை, காமகோடி சக்தி, ரிக்வேதம், மித்யாவாத ஸம்ப்ரதாயம், இந்த்ர ஸரஸ்வதியென்று ஸந்யாஸநாமம், ஸத்ய ப்ரஹ்மசாரி, ஓம் தத்ஸத் என்ற மஹாவாக்யம் பொருந்தினது. அங்கே ஐந்தாவது லிங்கமான யோகலிங்கத்தை வைத்துத் தான் பூஜித்து அதுமுதல் அங்கேயே வஸித்து வந்தார். (இது ஸ்ரீஹர்ஷ கவியால் நைஷதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது), தன் ஆதி சிஷ்யரான ஸுரேச்வராசார்யரைத் தனக்குப் பிறகு ஜகத்குருவாயும் காமகோடி பீடாதிபதியாயும் ஸகல மடங்களுக்கும் தலைவராயும் நியமித்தார் ஆகையால் ஸுரேச்வராசார்யார் சிருங்ககிரி த்வாரகா காஞ்சி மடங்களில் சங்கரருக்குப் பிறகு குருவாய் குரு பரம்பரையில் காட்டப்படுகிறார். ஸரஸ்வதீ சிருங்ககிரியில் தேவதையாய் வைக்கப்பட்டாள். மேலும் ஸுரேச்வராசார்யர் ஜகத்குருவுடன் எப்பொழுதும் வஸித்துக் கொண்டிருந்தாரென்று காண்

கிறேும். ஆகையால் அவர் சிருங்ககிரி மடத்தின் தலைவராய் வைக்கப்பட்டாரென்று சொல்வது பொருந்தாது. பிறகு, போகலிங்கத்திற்குப் பூஜை செய்கிறவர் ப்ரஹ்மசாரியாயிருந்தே ஸந்யாஸம் பெற்றவராயிருக்கவேண்டுமென்று ஏற்படுத்தி, ஸர்வக்ஞாத்ம ஸ்ரீசரணரென்ற சிஷ்யரிடத்தில் அந்தப் பூஜையை ஒப்புவித்தார்.

இப்படி ஸ்ரீசங்கராசார்யர் தன்அவதாரகார்யத்தை நிறைவேற்றி, ஸ்ரீகாஞ்சிபுரத்தில் கலியுகாதி 2625-வது வர்ஷமான ரக்தாக்ஷி ஸம்வத்ஸரத்தில் (477 B. C.) தன் 32வது வயஸில் தேஹத்தை விட்டுத் தன்னிருப்பிடமான மஹாகைலாஸத்திற்குச் சென்றார். அவருக்குப் பிறகு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தில் 67 ஆசார்யர்கள் வீற்றிருந்தார்கள். (வடக்குதேசத்தில் கேதாரநாத் என்ற திவ்யக்ஷேத்ரத்தில் ஸ்ரீ சங்கராசார்யர் தேஹத்தை விட்டாரென்று சில சங்கரவிஜயங்களில் சொல்லப்படும். ஹிமாலய மலையிலுள்ள ஓர் குகையில் ப்ரவேசித்துத் தன்னை யாதொரு சிஷ்யனும் தொடரக்கூடாதென்று ஆக்ஞாபித்து மறைந்தாரென்றும், அவர் இப்பொழுதும் சம்பலமென்ற புண்ய க்ஷேத்ரத்தில் மஹாயோகாசார்யராய் விளங்குகிறாரென்றும் சொல்வதுமுண்டு.)

## ஶ்ரீ சங்கர மதம்

அகண்டாகாரமாயும் மனோவாக்கிற்கெட்டாததாயும், ஸர்வபரிபூர்ணமாயும், ஒன்றாயும், இரண்டற்றதாயும், நாமரூபமற்றதாயும், ஸத்தும் அஸத்துமில்லாததாயும், ஸர்வ குணங்களற்றதாயுமிருக்கும் பரப்ரஹ்மமே யாவுமாம். அதை "இதுவல்ல, இதுவல்ல" வென்று விலக்கலாமேயொழிய, "இது"வென்று குறிக்கமுடியாது. அதின் அடையாளமே ப்ரணவம். ப்ரணவத்தின் நான்கு மாத்ரைகளையும் விளக்கும் வசனங்களே அஹம் ப்ரஹ்மாஸ்மி, தத்வமஸி, ப்ரக்ஞானம் ப்ரஹ்ம, அயம் ஆத்மா ப்ரஹ்ம வென்ற மஹா வாக்யங்கள். இந்தப் பரப்ரஹ்மத்தில் அக்னியில் சூடுபோன்ற அபின்னமானஓர் சக்தியுண்டு. அதே மூலப்ரகிருதி, அவ்யக்தம், மாயை, அவித்யை, தமஸ், அக்ஞானம், மோஹம், ப்ரதானம், குணஸாம்யமென்று சொல்லப்படும். வெளுப்பு, சிவப்பு, கறுப்பு நூல்களால் திரிக்கப்பட்ட கயிற்றைப்போல் இது ஸத்வ,ரஜஸ்,தமஸ் என்ற குணக்கலப்புள்ளது. இதில் அநேக கோடி ஜீவர்கள் தங்களுடைய கர்மவாஸனையுடன் மெழுகுண்டையில் தங்கப் பொடிகளைப்போல் ஸிருஷ்டிக்கு முந்தி

ப்ரளயத்தில் அடங்கியிருக்கிறார்கள். ஆகையால் இதற்கு மஹாப்ரளயமென்றும் மஹாஸுஷுப்தி யென்றும் பெயர். இந்த அனுபவம் ஸகல ஜனங்களுக்கும் ஸுஷுப்தியில் தெரிகிறது.

காரண ஸிருஷ்டி:— ஸிருஷ்டிகாலத்தில் ஜீவர்களுடைய கர்மவாஸனை பயனைக் கொடுக்கத் தலையெடுத்து மூலப்ரகிருதியை, மாயை அவித்தை தாமஸி யென்று மூன்று விதமாய்ச் செய்கிறது. மாயை சுத்தஸத்வ குணத்தை முக்யமாயுடையது. பரப்ரஹ்ம சைதன்யம் அதில் ப்ரதிபலித்து ஈச்வரன் அவ்யாகிருதன் அந்தர்யாமி யென்று சொல்லப்படுகிறது. அவனே ஜகத்தைச் ஸிருஷ்டித்து சம்ஹாரிக்கிறவன். பரிபூர்ண ப்ரஹ்ம சைதன்ய ரூபத்தால் அவன் தாமஸி யென்றதில் சேர்ந்து, நூலுக்குச் சிலந்திப்பூச்சியைப் போல், ஜகத்திற்கு உபாதான காரணமாகிறான். அவன் தமஸாய்விடவில்லை. தமஸுக்கன்யமாய் ப்ரஹ்மமுண்டு. சிலந்தி நூலைத் தானே உண்டாக்கி அதில் ஸஞ்சரித்தாலும் அதை விட அன்யமாயும் அதில் ஒட்டாமலுமி ,ப்பதுபோல் சைதன்யம் மாயையில் ஒட்டாமல் அதற்கு அன்யம். ஆரம்போபாதானம், பரிணாமோபாதானம், விவர்த்தோபாதானமென்று உபாதானம் முவகை

யாகும். வஸ்திரத்திற்குக் காரணமான நூல் யாதொரு மாறுதலன்றி வஸ்த்ரமாயிற்று. இங்கே நூல் ஆரம்போபாதானம். தயிருக்குக்காரணமான பால் தன் ஸ்வரூபம் மாறித் தயிராயிற்று; பால் பரிணாமோபாதானம். கயிற்றில் பாம்பென்ற தோற்றமுண்டாயிற்று; ஆனால் கயிறு பாம்பல்ல; கயிற்றில் பாம்புமில்லை. ப்ரமையான அக்ஞானத்தால் தோன்றின பாம்பென்ற மயக்கத்திற்கு கயிறு காரணமாகையால் அக்கயிறு விவர்த்தோபாதானம். ஜகத்திற்கு ப்ரஹ்மசைதன்யம் ஆரம்போபாதானமுமல்ல, பரிணாமோபாதானமுமல்ல. விவர்த்தோபாதானமே. அக்ஞானமிருக்கும் வரையில் பிரஹ்மத்தில் ஜகத்துத் தோன்றும். ஞானிக்கு ப்ரஹ்மத்தைத் தவிர வேறு வஸ்து தோன்றாது. அவனுக்கு ஜகத்தென்பது பொய்யே. ஈச்வரன் தாமஸியால் உபதான காரணமும், கடமுண்டாவதற்குக் குயவனைப் போல் ஜகத்திற்கு நிமித்த காரணமும் ஆகிறான். அவித்யை பலவிதம், எண்ணமுடியாதது. அதில் ப்ரதிபலித்த சைதன்ய ஸ்வரூபிகளான ஜீவர்கள் எண்ணமுடியாதவர்கள். ஒருவனைச் சுற்றி அனேக கோடிக்கண்ணாடிகளை வைத்தால் அவைகளில் காணப்படும் ரூபங்களைப்போல் ஜீவன்களும் ஈச்

வரனுடைய ப்ரதிபிம்பங்கள். ஜீவனுக்கு அவித்யையும் ஈச்வரனுக்கு மூலப்ரகிருதியும் காரண சரீரம். இதனால் அவர்களுக்கு ஸுஷுப்தி யவஸ்தையுண்டாகிறது. இதே அவர்களுக்கு ஆனந்த மயகோசம்.

ஸூக்ஷ்மஸிருஷ்டி:— ஈச்வரனுடைய பார்வையால் தமோகுணரூபியான ப்ரகிருதி ஆவரண சக்தி விக்ஷேபசக்தியென்று இரண்டாயிற்று. விக்ஷேபசக்தியிலிருந்து ஸூக்ஷ்ம ஆகாசம், வாயு, அக்னி, ஜலம், பிருதிவியென்ற ஐந்து ஸூக்ஷ்ம பூதங்கள் அல்லது தன்மாத்ரைகள் உண்டாயின. இவைகளுக்குக் காரணமான அக்ஞானத்திலிருந்து ஸத்வ ரஜஸ் தமோகுணங்கள் வந்திருக்கின்றன. இந்த பூதங்களின் ஸத்வகுணாம்சத்திலிருந்து முறையே ஐந்து ஞானேந்திரியங்களும் இவைகளின் ஸத்வ அம்சச் (ஸமஷ்டி) சேர்க்கையாலே அந்தக்கரணமுமுண்டாயின. அது மனஸ், புத்தி, அஹங்காரம், சித்தமென்று நால்வகை. புத்தியில் அஹங்காரமும் மனஸில் சித்தமும் அடங்கும். மேற்சொன்ன பூதங்களின் ரஜோகுணத்திலிருந்து வ்யஷ்டியால் முறையே கர்மேந்திரியங்களும் ஸமஷ்டியால் ஐந்து ப்ராணன்களும் உண்டாயின. இப்

படி ஞானேந்திரியங்கள் ஐந்து, கர்மேந்திரியங்கள் ஐந்து, ப்ராணன்கள் ஐந்து, மனஸ், புத்தி இந்தப் பதினேழுமே லிங்கசரீரமென்றும் ஸூக்ஷ்ம சரீரமென்றும் சொல்லப்படும். இதே போகத்திற்கு ஸாதனம். இதில் ஜீவேச்வரர்களுக்கு ஸ்வப்னவஸ்தையுண்டாகிறது. இதில்ப்ராணமய, மனோமய, விக்ஞானமய கோசங்கள் அடங்கியிருக்கின்றன.

ஸ்தூல ஸிருஷ்டி:—ஸூக்ஷ்ம பூதங்களைப் பஞ்சீகரணம் செய்வதால் ப்ரஹ்மாண்டமும் அதிலுள்ளான பதினலு லோகங்களும் நான்கு யோனிகளும் அன்னம் முதலிய போக்ய வஸ்துக்களும் உண்டாகின்றன. இந்த ஸ்தூல சரீரத்தில் ஜீவேச்வரர்களிருப்பதே அவர்களுக்கு ஜாக்ரதவஸ்தை. இதே அன்னமயகோசம். இந்த மூன்று சரீரங்களில் ஸமஷ்டியாய்த் தன்னுடையதென்று அபிமானமுள்ளவன் ஈச்வரன். வ்யஷ்டியாய் அபிமானங்கொண்டவன் ஜீவன். ஸமஷ்டியான மஹாகாரண, மஹாஸூக்ஷ்ம, மஹாஸ்தூல சரீராபிமானி முறையே ஈச்வரன், ஹிரண்யகர்ப்பன், வைச்வானரன் என்றும், வ்யஷ்டியில் ப்ராக்ஞன், தைஜஸன், விச்வனென்றும் சொல்லப்படுவான். ஈச்வரன் முக்குணங்களாகிய உபாதிகளால்

ப்ரஹ்மா, விஷ்ணு, ருத்ரனென்ற ரூபங்களை யெடுத்து விருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரங்களைச் செய்கிறான். விராட், ஹிரண்யகர்ப்பன், ஈச்வர னென்ற ரூபங்களில் த்ரிமூர்த்திகள் முறையே அடங்கியிருக்கின்றார்கள்.

ஆத்மாவிற்கும் பஞ்சகோசங்களுக்குமுள்ள பேதத்தை, ஈச்வரன் ஆத்மஞானி யென்றவர்களை தவிர மற்றெல்லோருக்கும் இருட்டைப்போல் மறைப்பதே ஆவரணசக்தி. வஸ்துவே இல்லை யென்ற தோற்றத்திற்குக் காரணம் அஸத்வாவர ணம்: வஸ்து விளங்கவில்லையென்ற தோற்றத்திற் குக் காரணம் அபானுவரணம். ஸம்ஸார விருக்ஷத் திற்கு ஆவரணசக்தி கார்யம், விசேக்ஷப சக்தி காரணம். ஆவரணமில்லாவிடில், மோக்ஷமில்லை யாகையால்ஆவரணசக்தியே மோக்ஷகாரணமென் றும் சொல்லப்படும். இவ்விரண்டு ஆவரணமும் தத்வஞானத்தால் நசிக்கும். குருமூலமாயும் வேதாந்தசாஸ்த்ரத்தாலும்பரோக்ஷஞானமென்ற ச்ரவணம் உண்டாகும். இதனால் அஸத்வா வரணம் நசிக்கும். ச்ரவணத்தால் ஸம்சயமும், மனனத்தால் அஸம்பாவனையும், நிதித்யாஸத்தால் விபரீதபாவனையும் போம். தேஹமே ஆத்மா வென்ற ஞானம் உறுதியாயிருப்பதுபோல் ப்ரஹ்

மமே நான் நானே ப்ரஹ்மமென்ற அபரோக்ஷ ஞானத்தால் அபாவரணம் அழியும். அப்பொழுது அனர்த்த நிவிருத்தியும் ஆனந்த ப்ராப்தியுமுண்டாகும். இப்படி அக்ஞானம், ஆவரணம், விக்ஷேபம், பரோக்ஷ ஞானம், அபரோக்ஷ ஞானம், துக்க நிவிருத்தி, ஆனந்த ப்ராப்தியென்று ஜீவனுக்கு ஏழு அவஸ்தைகள். ஆகாசத்தைப் போல் நிர்மலமான சைதன்யத்தில் பொய்யாம் ப்ரபஞ்சத்தைக் கற்பித்தல் அர்த்யாரோபம்; காரணத்தைத் தவிர கார்யமில்லை யென்ற அறிவால் கிளிஞ்சிலில் வெள்ளியைப்போலவும் கயிற்றில் பாம்பைப்போலவும் ப்ரஹ்மத்தில் ப்ரபஞ்சமில்லையென்று தள்ளுவது அபவாதம். இப்படி அறிகிறவனே ஜீவன்முக்தன்.

சாதன சதுஷ்டயம்:—ப்ரஹ்மமே நித்யம், ஜகத் அநித்யமென்று சாஸ்த்ரஞானத்தால் உண்டாகும் நிச்சயம் நித்தியா நித்யவஸ்து விவேகம். இஹபரலோகங்களிலுள்ள ஸகல விஷயபோகங்களும் அநித்யமென்று அவைகளில் வாந்திசெய்த அன்னத்திலும் மல மூத்ரங்களிலும் உண்டாவது போன்ற வெறுப்புண்டாவதே வைராக்கியம். ச்ரவண மனனங்களில் மனதைநிறுத்துவது சமம்.

ஞானகர்மேந்திரியங்களை அடக்குவது தமம். பலா பேக்ஷையின்றி கர்மங்களைச் செய்தல் உபரதி அல்லது ஸந்யாசம். லோக துக்கங்களைப் பொறுத்துக்கொள்வது திதிக்ஷை. ச்ரவண மனனங்களுக்கு அநுகூலமான விஷயத்தில் மனஸைச் செலுத்துவது ஸமாதானம். குருவிடத்திலும் வேதாந்த சாஸ்த்ரத்திலும் விச்வாஸம் வைப்பது ச்ரத்தை. இவ்வாறும் சமாதிஷட்கமெனப்படும். தலையில் நெருப்புப்பிடித்தவன் பெண்டு பிள்ளை வீடு தனம் முதலியவைகளை விட்டு ஜலத்தையே தேடி ஓடுவதுபோல், தாபத்ரயாக்னியால் கொளுத்தப்பட்டு அதைதணிப்பதற்காகக் குருவைத் தேடிப்போவதே முமுக்ஷுத்வம். இந்த நான்கு ஸாதனங்களும் உள்ளவனே வேதாந்த சாஸ்த்ரத்தில் அதிகாரி.

உயிருள்ளதான சேதனமென்றும் உயிரில்லாததான அசேதனமென்றும் ப்ரபஞ்சம் இருவகையாகும். ஆத்மா ஒன்றே உபாதிகளால் அநேக ஜீவர்களென்றும்ஈச்வரர்களென்றும் விளங்குகிறது. அநாத்மாவும் ஒன்றே, கார்ய ரூபத்தால் அநேகமாய் விளங்குகிறது. ஒரே பூமி, மலை மரம் கோபுரம் சுவர் வீடு மடம் சட்டி பானையென்றும், ஒரே ஆகாசம் கடாகாசமென்றும் மடாகாச

மென்றும் விளங்குவதே இதற்கு உதாஹரணம். இப்படியே ராமன், கிருஷ்ணன், ப்ராம்மணன், சூத்ரன், பசு, பக்ஷியென்று ஜீவன் விளங்குகிறான். ஒரே ஜலம், ஸமுத்ரம் நதி குளம் கிணறென்று விளங்குகிறது. ஒரே ஸூர்யன் இவைகளில் பலவிதமாய்ப் ப்ரதிபலிக்கிறான். ஜலங்களின் குணங்கள் ஸூர்யனைப் பற்றுகிறதில்லை. அந்தக் கரணத்தின் விகாரங்களும் ஆத்மாவைத் தொடுகிறதில்லை. கடாகாசமே மஹாகாசம். இப்படி ஜீவாத்மாவே பரமாத்மா, பரமாத்மாவே ஜீவாத்மா. ஜீவன் பாரமார்த்திகன், வ்யாவஹாரிகன், ப்ராதிபாஸிகனென்று மூவகையாவன். இவர்கள் முறையே ஸுஷுப்தி ஜாக்ரத் ஸ்வப்னமென்ற அவஸ்தைகளுக்கு அபிமானிகள். ஜலத்தில் அலையும், அலையில் நுரையும் எப்படிக்கற்பிதமோ, அப்படி பாரமார்த்திகனிடத்தில் வ்யாவஹாரிகனும், அவனிடத்தில் ப்ராதிபாஸிகனும் கற்பிக்கப்படுகிறார்கள். ஜலத்தின் குணங்கள் அலையிலும் நுரையிலும் துளிகளிலும் விளங்குவதுபோல் பாரமார்த்திகனிடத்திலுள்ள ஸச்சிதானந்த குணங்கள் வ்யாவஹாரிகனிடத்தில் விளங்குகின்றன. அலையின்றி நுரையும் ஜலமின்றி அலையுமில்லை; ஜலம் மாத்ரமே வாஸ்தவம். இப்படியே ப்ராதி

பாஸிகன் வ்யாவஹாரிகனைத் தவிர வேறில்லை. வ்யாவஹாரிகனைத் தவிர பாரமார்த்திகன் வேறல்ல. பாரமார்த்திகனான கூடஸ்தனே பரமாத்மாவென்பது ஸித்தாந்தம். இப்படி நேதிநேதியென்ற ச்ருதிவாக்யத்தால் தேஹாதி பஞ்சகோசங்களிலிருந்தும் பாரமார்த்திக கூடஸ்தனை வேறுபடுத்தி அவனே நானென்று சாஸ்த்ரத்தாலும் யுக்தியாலும் நிச்சயித்து, அநுபவத்தால் நேரில் பார்த்து (ஸாக்ஷாத்கரித்து) பரிபூர்ண பரஹ்மஸ்வரூபியானவனே முக்தன்.

இந்த முக்தியும் ஸாலோக்ய ஸாமீப்ய ஸாரூப்ய ஸாயுஜ்யமென்று நான்குவிதம். பகவத்கைங்கர்யரூபமான ஆண்டான் அடிமையென்ற எண்ணமே சரியை; இது ஸாலோக்யத்தைக் கொடுக்கும். சிவ விஷ்ணு முதலிய தேவதைகளைப் பூஜைசெய்வது க்ரியை; இது ஸாமீப்யத்தைக் கொடுக்கும். யமநியம ஆஸன ப்ராணாயாம ப்ரத்யாஹார தாரணத்யான ஸமாதியென்ற அஷ்டாங்கயோகமே ஸாரூப்யத்தைக் கொடுக்கும். ஜீவாத்மா பரமாத்மாக்களின் ஐக்யஞானமே ஸாயுஜ்யத்தைக் கொடுக்கும். முதல் மூன்று முக்திகளிலிருந்தும் திரும்புவதுண்டு. புநராவர்த்தியில்லாத முக்தி ஸாயுஜ்யமொன்றே.

ராக த்வேஷ காம க்ரோத லோப மோஹ மத மாத்ஸர்ய ஈர்ஷ்யா அஸூயா டம்ப தர்ப்ப அஹங்கார இச்சா பக்தி ச்ரத்தாவென்ற பதினாறு விருத்திகளால் கர்மமும் கர்மத்தால் ஜீவனுக்கு சரீரமும், சரீரத்தால் துக்கமும் உண்டாகின்றன. அந்தத் துக்கம் ஆத்மானாத்ம விவேகத்தால் அழியும். ஆத்மா ஸ்தூல ஸூக்ஷ்ம காரணமென்ற மூன்று சரீரங்களுக்கும் விலக்ஷணன். ஜாக்ரத் ஸ்வப்ன ஸுஷுப்தியென்ற மூன்று அவஸ்தைகளுக்கும் ஸாக்ஷி. அன்ன ப்ராண மனோ விக்ஞான ஆனந்தமயமென்ற பஞ்ச கோசங்களுக்கும் அன்யன். ஸச்சிதானந்த லக்ஷணமுடையவன். மூன்று சரீரங்களும் அனாத்மாவாகும்: அவைகளுக்கு அனிதரும் ஜடம் துக்கம் என்றவையே லக்ஷணங்கள்.

ஆத்மா சரீரத்ரய விலக்ஷணன்;பஞ்சகோசங்களுக்கு அன்யனென்பதே அதத்வ்யாவிருத்தி லக்ஷணம், மூன்றவஸ்தைகளுக்கும் ஸாக்ஷியென்பது தடஸ்தலக்ஷணம். ஸத்சித்ஆனந்தம் பூர்ணம் நித்யம்என்றவை ஆத்மவிருத்தியென்பது ஸ்வரூப லக்ஷணம்; ஆகாசம் முதல் சரீரம்வரையில் காணப்படும் வஸ்துக்களைத் தள்ளி எது மிஞ்சினதோ அதே ஆத்மாவென்பது அதத்வ்யாவிருத்தி

லக்ஷணம். இந்த ப்ரபஞ்சம் எதிலிருந்து உண்டாகிறதோ எதினால் நிலைத்திருக்கிறதோ எதில் அடங்குகிறதோ அதே ஆத்மாவென்பது தடஸ்த லக்ஷணம். ஸத் சித் ஆனந்தம் பூர்ணம் நித்யம் என்பது ஸ்வரூப லக்ஷணம். செல்காலம் நிகழ்காலம் வருங்காலமென்ற மூன்றாலும் பாதிக்கப்படாமல் ஒரே ரூபமாய் இருப்பதே ஸத்லக்ஷணம். ஸூர்யன் முதலானவைகளின் உதவியின்றி தானாகவே விளங்கிக்கொண்டும் தன்னிடத்தில் ஆரோபிக்கப்பட்ட ஸகல ஜட பதார்த்தங்களையும் விளக்கிக் கொண்டுமிருப்பதே சித்ரூபம். நித்யமாயும் நிருபாதிகமாயும் நிரதிசயமாயுமிருக்கிற ஸுகமே ஆனந்தம்; அதே ஆத்மஸ்வரூபம். அதாவது, முக்காலங்களிலும் ஒரேவிதமாயிருப்பதாயும், தேஹம் முதலான பதார்த்தங்களை அபேக்ஷிக்காமலும் அதைக் காட்டிலும் மேலானது ஒன்றுமில்லாமலுமிருக்கும் ஆனந்தமே ஆத்மாவின் லக்ஷணம்.

காலத்தாலும் தேசத்தாலும் வஸ்துவாலும் பரிச்சேதம் அற்றிருப்பதே ஆத்மாவின் அகண்டார்த்த லக்ஷணம். ஒன்றாலும் வ்யாபிக்கப்படாமலிருப்பதே தேச பரிச்சேதமற்றிருப்பது; உத்பத்தி நாசமில்லாமையே கால பரிச்சேத மற்

றிருப்பது! தன்னைவிட வேறொரு வஸ்துவில் லாமையாலே வஸ்துபரிச்சேதமுமில்லை. எக் காலத்திலும் எவ்விடத்திலும் ஒரே வஸ்துவாய் இரண்டற்றிருப்பதால் ப்ரஹ்மம் மூன்றுவித பரிச்சேதங்களற்றது. ஆத்மா ஸஜாதீய விஜா தீய ஸ்வகத பேதங்களற்றது. ஒரு விரு க்ஷத்திற்கு மற்றொரு விருக்ஷம் ஸஜாதீயம். (ஒரே ஜாதியைச் சேர்ந்தது); விருக்ஷத்திற்குக் கல் முதலியவை விஜாதீயம்; விருக்ஷத்திற்கு அதின் காய் கனி இலை முதலியவை ஸ்வகதம்; இந்த மூன்று பேதங்களும் ஆத்மாவிற்கில்லை. ஆகையால் வஸ்து பரிச்சேதமற்றவன்.

பரிபூரணனந்த ஆத்மாவிற்குத் துக்கம் ஸ்வ பாவமல்ல, ஆதந்துகம் (நடுவில் வந்தது). துக்கம் சரீரங்கள் கர்மம் ராகத்வேஷமுதலியவை அபி மானம் அவிவேகம் அக்ஞானம் என்றவை ஒன் றிற்கொன்று முறையே காரணங்கள். அக்ஞானம் ஞானத்தால் நிவிருத்தியாகும்; ஞானம் விசாரத் தால் உண்டாகும். ஆத்மா ஸச்சிதானந்த ஸ்வரூப மென்றும், தேஹாதிப்ரபஞ்சமானது பொய்ஜடம் துக்கரூபமென்றும், அந்த ப்ரபஞ்சம் ப்ரஹ்மத்தி டத்தில் கல்பிக்கப் பட்டதென்றும், மஹாவாக் யங்களை ச்ரவண மனன நிதித்யாஸனஞ் செய்

வதால் உண்டாகும் ஞானத்தால் அடையப்படும் நானே ப்ரஹ்மமென்ற ஸாக்ஷாத்கார அபரோக்ஷ ஞானத்தை ஸம்பாதிக்கிறவன் முக்தன். அவனே நித்ய சுத்த புத்தி முக்த ஸத்ய பரமார்த்த அத்வய ப்ரஹ்ம ஸ்வரூபமாயிருப்பவன்.

## மதத்ரய விவேகம்.

அத்வைதம் (1)— ப்ரஹ்மம் நிர்குணமென்பது அத்வைத மதம். ஆனால் ச்ருதிகளில் காணப்படும் இந்தப் பதத்திற்கு "ப்ரக்ருதியின் குணங்களால் தொடப்படாதது; ஹேய குணங்களற்றது; அனந்த கல்யாண குணங்களையுடையதெ"ன்றே அர்த்தஞ் செய்ய வேண்டும்.

(2) "ப்ரஹ்மம் மனோவாக்கிற்கெட்டாதது" என்ற அத்வைத சுருதிக்கு, ஜீவனுடைய மனஸால் அதைப் பூரணமாய் அறியாமுடியாதென்றும் மனுஷ்யனால் உபயோகிக்கப்படும் வாக்கால் அவரைப் பூர்ணமாய் வர்ணிக்க முடியாதென்றுமே தாத்பர்யம்.

(3) ப்ரஹ்மம் இரண்டு விதமென்றும்; அபரப்ரஹ்மம் அல்லது கார்யப்ரஹ்மமெ (ரூபமுடையது, விகாரமுடையது, பரிச்சேதமுடையதெ)ன்றும்; பரப்ரஹ்மம், அல்லது காரணப்ரஹ்ம (ரூபமற்றது, விகாரமற்றது,

அகண்ட)மென்றும் அத்வைதிகளின் மதம். இந்த பேதம் சுருதிகளால் ஒப்புக்கொள்ளப்படவில்லை. கார்யப்ரஹ்மமென்பது சதுர்முகப்ரஹ்மாவே. ஸிருஷ்டியின் ஆதியில் தோன்றும் ஹிரண்யகர்ப்பனே யென்று அந்த வாக்யங்களுக்கு அர்த்தஞ் செய்யவேண்டும்.

(4) ப்ரஹ்மம் யாதொரு குணங்களுமற்றதென்பது அத்வைதக் கொள்கை. ஆனால் இது கேவலம் சூன்யவாதமே, நாஸ்திகமதமே. குணங்களற்றதென்ற தன்மையும் ஓர் குணமாகுமல்லவா ? அப்படிக் குணங்களற்றிருந்தால் ப்ரஹ்மஞானவிஷயமாய் கோடானு கோடி க்ரந்தங்கள் ஏற்பட்டிருப்பதும், மோக்ஷத்திற்கு ப்ரஹ்மவிசாரமே ஸாதனமென்பதும் பொய்யாகும்.

(5) ப்ரஹ்மம் ஸச்சிதானந்த ஸ்வரூபமென்றதற்கு அத்வைதிகள் விசித்ரமாய் அர்த்தஞ்செய்கிறார்கள். ஸத் என்ற லக்ஷணம் வ்யாவஹாரிக, ப்ராதிபாஸிக, பாரமார்த்திக மென்று மூவகைப்படுமென்றும், பரப்ரஹ்மமே பரமார்த்திக ஸத்யம், ஸ்தூல ஸூக்ஷ்ம காரண ப்ரபஞ்சம் யாவும் இந்திரியங்களால் அடையப்படும் வ்யாஹாரிக ஸத்யமென்றும், மணலால் கற்

பிக்கப்பட்ட ப்ராதிபாஸிக ஸத்யமென்றும் ஏற்படும். அபரோக்ஷ ஸாக்ஷாத்காரத்தாலன்றி வ்யாவஹாரிக ஸத்யம் நசிக்காது; அதுவரையில் தொடரும். இதற்குக் காரணம் மூலாவித்யை: ப்ரஹ்மத்துடன் ஐக்ய அநுபவத்தாலேயே இது அழியும். பொய்யாயும் கல்பிதமாயும் மாயையாயும் கயிற்றில் பாம்பைப்போலும், கிளிஞ்சிலில் வெள்ளியைப்போலும் தோன்றும் ப்ராதிபாஸிக ஸத்யத்திற்குக் காரணம் தூலாவித்யை. தத்வஞானத்தால் கயிறென்றும் கிளிஞ்சலென்றும் நேரில் பார்ப்பதுபோல் இது அழியுமென்றும் அத்வைத ஸித்தாந்தம். ஆனால் இது ஸரியல்ல. கயிற்றில் தோன்றும் பாம்பு ப்ரமைகொண்டவனுடைய புத்தியில் உண்டாகும் பொய்த்தோற்றமே; இதை எவ்விதஸத்யமென்று சொல்வதும் பொருந்தாது. ப்ரபஞ்சம் வ்யாவஹாரிக ஸத்யமென்றும், அபரோக்ஷ ஞானம் இதை அழிக்குமென்றும் சொல்வது ஸரியல்ல. இந்த விதமான ஸத்யமும் ஸத்யமல்ல. இந்த ஸாக்ஷாத்காரமும் ப்ரமாணத்தாலும் அநுபவத்தாலும் ஏற்பட்டதல்ல. இந்த ஞானத்தால் ஸத்யம் அழியுமென்பது முற்றிலும்பொருந்தாது. நமது இஷ்டப்படி இருட்டை ப்ரகாசமென்றும் ப்ரகாசத்தை இருட்டென்றும் சொல்வதால்

அந்த வஸ்துக்களின் ஸ்வரூபம் மாறுமோ? ஒரு பதார்த்தம் ஸத்யமாயாவது அல்லது அஸத்யமா யாவது இருக்கவேண்டும். மூன்றாவது ஸ்திதி இருக்க ந்யாயமில்லை. ஸத்யத்திலும் அஸத்யத்தி லும் படிகளும் ஏற்றத் தாழ்வுகளும் இருக்கமுடி யாது.

(6) ப்ரஹ்மத்தைத் தவிர மற்ற யாவும் பொய்யென்றும் மித்யையென்றும் அத்வைதி கள் சொல்லுகிறார்கள். இதற்கு ப்ரமாணமாய் வேதவாக்யங்கள் காணப்படுகின்றனவென்றால் அந்த வேதமே பொய்யாகிறது. நாம் ஒப்புக் கொள்ளத்தகாதது. பொய்யான சிஷ்யனுக்கு உண்டான பொய்யான அக்ஞானத்தை பொய் யான குரு பொய்யான வேதவாக்யங்களால் போக்கி, பொய்யான ஞானத்தை அனுக்ரஹித்துப் பொய்யான பந்தத்திலிருந்து விடுவித்துப் பொய் யான மோக்ஷத்தைக் கொடுத்தாரென்றல்லவா ஏற்படும்? இதே ஸர்வசூன்யவாதம்.

(7) ப்ரஹ்மமும் அவித்யையும் சேர்ந்து ப்ர பஞ்சத்திற்குக் காரணமென்பதும், குடம் மண் ணுய் மாறினதுபோல ப்ரஹ்மமே ப்ரபஞ்சமாய் மாறிற்றென்பதும் பரிணாமவாதம். இப்படியானால் காரணமும்கார்ய மும் ஒரேவிதமான குணங்களை

உடைத்தாயிருக்கவேண்டுமெல்லவா? ப்ரஹ்மம் உபாதானகாரணமாயிருந்தால், அதற்குள்ள ஸத்ய குணம் அதின் கார்யமான ப்ரபஞ்சத்திற்கும் ஏற்படுகிறது.

(8) மாயை அல்லது அவித்யையென்பது ப்ரஹ்மத்தைத் தன்னிடத்தில் ப்ரதிபிம்பிக்கச் செய்து ஸ்தூல ஸூக்ஷ்ம ப்ரபஞ்சத்திற்குக் காரணமாகிறது. அதினுல் ப்ரதிபிம்பங்களுக்கு விகாரமுண்டாகுமேயொழிய மூலவஸ்துவிற்கு உண்டாகாது.

“கானநீர் கிளிஞ்சில் வெள்ளி கந்தர்வ நகர்
[கனூர்
வானமை கயிற்றிற் பாம்பு மலடிசேய் முய
[லின் கோடு
பீனமாந் தறி புமானில் ப்ரபஞ்சமென்ப
[தெல்லாம் பொய்யே,

ஞானம் மெய்” என்பது விவர்த்தவாதம். இதை விசாரிப்போம். நித்ய சுத்தமான வஸ்து எப்படி அசுத்தமாகும், அல்லது தோன்றும்? நித்ய முக்தமான வஸ்து எப்படிப் பத்தமாகும். அல்லது தோன்றும்? மாயை காரணமென்ருல் மாயையாவதென்ன? அது ஞானத்தின் இல்லா

மையல்ல, அபாவமல்ல; ஓர் இருக்கும் பதார்த்தமே (பாவரூபமே). பொய்யான ஞானம் (அக்ஞானம்) ப்ரமையென்று சொல்லப்படுகிறது. அது அநிர்வசனீயமான வஸ்துவென்றும் பாவரூபமென்றும் சொன்னால் அது ஸத்தா, அஸத்தா? ஸத்தானால் அத்வைதம் நசிக்கிறது. அஸத்தானால் பாவரூபமல்ல. இது ஸதஸத் என்றும், இரண்டும் கலந்ததென்றும், அநிர்வசனீய (இன்னதென்று சொல்லமுடியாதது) மென்றும் வர்ணிக்கிறார்கள். வ்யவஹாரிக ஸத்யம் அவித்யையால் உண்டாகிறதென்றால், ஓர் அவித்யைக்கு வேறொரு அவித்யை காரணமாகிறது. மேலும் அவித்யை பாவரூபமானால், ஞானத்தாலாவது ஆத்ம ஸாக்ஷாத்காரத்தாலாவது எப்படி அழியும்? ஞானம் இல்லாததே அக்ஞானம். ஞானம் அக்ஞானத்தை அழிக்கும். அக்ஞானம் நசித்தால் ஞானம் விளங்குகிறது. ஆனால் இவ்விரண்டும் பாவரூபங்களானால் ஒன்றையொன்று அழிக்க முடியாது. ஒரே காலத்திலும் ஒரே தேசத்திலும் இரண்டும் விளங்கினாலொழிய இப்படிச் சொல்ல முடியாது. இதை இப்படியிருப்பதாய் அத்வைதிகள் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். மேலும், அவித்யை இப்படி ஏன் செய்யவேண்டும்? ப்ரஹ்ம

ஸ்வரூபமான ஜீவன் கிஞ்சிக்ஞனும் நானா பாவனைகளையுடையவனும் ஏனிருக்கவேண்டும்? ப்ரஹ்மம் விகாரமுள்ளதா, விகாரமற்றதா? விகாரமற்றதானால் ப்ரபஞ்சத்திற்கு உபாதான நிமித்த காரணங்களாய் எப்படியிருக்கமுடியும்? இப்படி பரிணாமவாதம் ப்ரயோஜனமற்றதென்று ஏற்பட்டது. விவர்த்தவாதத்தில் ப்ரபஞ்சம் தனியாய் ஸத்தியமாய்த் தோன்றுவது ப்ரமையென்றும், ஸ்வப்னமென்றும் சொல்லப்பட்டால், ஸ்வப்னத்தைக் காண்கிறவன் யார்? ஏன் காணவேண்டும்? ஜீவனே காண்கிறானென்றால், அவன் அவ்வித ஸ்வப்னத்தின் கார்யமென்றும், அந்த ஸ்வப்னத்திற்கு முன் ஜீவனில்லையென்றும் எப்படிச் சொல்லலாம்? ஆகையால் ஸ்வப்னமும் மித்யாக்ஞானமும் ஏற்படுவதற்குமுன் ஜீவன் இருக்கவேண்டும். மாயையால் அவன் மயக்கப்பட்டு ஸ்வப்னத்தைக் காணவேண்டும். ஆனால் ஸ்வப்னத்தாலும் ஸ்வப்னத்திற்குப் பிறகும் அதற்குப் கார்யமாயும் அவன் எப்படியாவான்? கயிற்றில் பாம்பு தேன்றுகிறதென்றால், பார்க்கும் புருஷனும் ஸத்யபதார்த்தமான பாம்பும் (இது முயலின் கொம்பைப்போல் அல்ல). நீளம் வளைவு நிறம் முதலிய குணங்களால் கயிற்றிற்கும் பாம்

பிற்குமிருக்கும் ஒற்றுமையென்ற அம்சங்களும் அடங்கியிருக்கின்றன. இப்படி ப்ரஹ்மமே ஜீவன் அல்லது ப்ரபஞ்சமென்ற ப்ரமை ஏற்பட்டதென்றால், அந்த ஜீவனும் ப்ரபஞ்சமும் ஸத்யமான பதார்த்தமென்றும், பாம்பைப்போல் லோகத்தில் உள்ள வஸ்துவென்றும், கேவலம் புத்தியால் கற்பிக்கப்பட்ட பொய்யல்லவென்றும் ஏற்படும். மேலும், பாம்புக்கும் கயிற்றிற்குமுள்ள பொதுவான குணங்களைப்போல் சில காரணங்கள் ஏற்பட்டுப், பார்ப்பவனை மயக்கி இவ்விதமாய் எண்ணும்படி செய்யவேண்டும். ப்ரஹ்மம் ஜீவனே அல்லது ப்ரகிருதியேயென்று எண்ணும்படிசெய்யக்கூடிய காரணம் யாதொன்றும் தோன்றவில்லை.

மாயாவாதத்தை ஸ்ரீமத் ராமாநுஜாசார்யர் ஸ்ரீபாஷ்யத்தில் அடியிற்கண்டபடி ஆக்ஷேபித்திருக்கிறார்.

1. ஆச்ரயண அநுபபத்தி:—ஜீவாத்மாவின் தன்மை அவித்யையால் கற்பிக்கப்பட்டபடியால் இந்த அவித்யை அவனை ஆச்ரயமாய் உடைத்தாயிருக்கமுடியாது. ப்ரஹ்மம் ஸ்வப்ரகாச சைதன்யமானதால் அதுவும் அவித்யைக்கு ஆச்ரயமாயிருக்கமுடியாது. ஆகையால் அவித்யைக்கு இருப்பிடமேயில்லை.

2. திரோதான அநுபபத்தி:—ப்ரஹ்மம் சின்மயமாயும் தேஜோமயமாயும் ஸ்வப்ரகாசமாயு மிருப்பதால் அவித்யை அதை மறைக்கமுடியாது. அப்படி மறைத்தால் ப்ரஹ்மத்தின் ஸ்வபாவமே நாசமடையும்.

3. ஸ்வரூப அநுபபத்தி:—அவித்யை பாவ ரூபமான பதார்த்தமானல் அது ஸத்தின் ஸ்வபாவத்தையாவது அஸத்தின் ஸ்வபாவத்தை யாவது உடைத்தாயிருக்கவேண்டும். ஆனல் அதை ஸத்தென்று ஒப்புக்கொள்ளுகிறதில்லை. ப்ரஹ்மத்தைத் தவிர வேறான பாதார்த்தம் ஒன்று ப்ரமையை உண்டாக்குகிறதென்று ஒப் புக்கொள்ளாவிட்டால் மாயாவாதத்தை நிலை நிறுத்துவது ஸாத்யமல்ல! அது அஸத்தாயிருக்க நியாயமில்லை.

4. அநிர்வசனீயத்வ அநுபபத்தி:—ப்ரா ந்திக்குக் காரணமான அவித்யை ஸத்தென்றும் அஸத்தென்றும் சொல்லமுடியா தென்பது ஸரி யல்ல. ப்ரக்ஞைக்கு விஷயமான ஸகல பதார்த் தங்களும் ஸத்தாயாவது அஸத்தாயாவதிருக்க வேண்டும். ஸத்தென்ற பாவபதார்த்தத்தின் லக்ஷணங்களையாவது அஸத்தென்ற அபாவபதார் த்தத்தின் லக்ஷணங்களையாவது உடைத்தாயிருக்

கும். ஒன்று ப்ரக்ஞைக்கு விஷயமானால் எல்லா பதார்த்தங்களும் எல்லாவித ஞானத்திற்கும் விஷயமாகவேண்டும்.

5. ப்ரமாண அநுபபத்தி:—ப்ரத்யக்ஷம் அநுமானம் சப்தமென்ற ப்ரமாணங்களால் நமது ப்ரக்ஞைக்கு விஷயமாய் அவித்யை ஆகக்கூடுமென்று யாதொரு ருஜுவுமில்லை.

6. நிவர்த்தக அநுபபத்தி:—நிர்க்குணமான ப்ரஹ்மத்தை விஷயமாயுடைய ஞானத்தால் அக்ஞானம் நிவர்த்தியாகாது. ஏனென்றால் அவ்வித ஞானமே அஸாத்யம். மேலும் அது பூர்ணமான தத்வஞானமாகாது.

7. நிவிருத்தி அநுபபத்தி:—அத்வைதிகளின் அவித்யை ஒரு நாளும் ஒழியாதது.

அடியிற்கண்ட ப்ரமாணங்கள் அத்வைத மதஸித்தாந்தத்திற்கு ஒப்பாதவை:—

1. ஜீவாத்மாவும் அதை ஏவுகிறனும் வெவ்வேறென்று அறிந்து, அவரால் ஆசீர்வதிக்கப்பட்டு, அவன் அமிருதத்வத்தை அடைகிறான் (ச்வேதாச்வதர உபநிஷத்).

2. ஸகலத்தையும் யார் அறிகிறானோ (மாண்டூக்ய).

3. அவனுடைய பரமமான சக்தி பலவித மென்றும் ஸ்வபாவமாயுள்ளதென்றும் ஞானம் பலம் க்ரியை இவைகளின் ஸ்வரூபமென்றும் ச்ருதிகள் சொல்லுகின்றன (ச்வேதாச்வதர).

4. எவனுடைய விருப்பங்கள் ஸத்யமோ, எவனுடைய இச்சை (சங்கல்பம்) ஸத்யமோ (சாந்தோக்ய).

5. வேதத்தில் இப்படிச் சொல்லப்படாத தால் ஆத்மா கார்யபதார்த்தமல்ல. (வேதாந்த ஸூத்ரம் I. 3).

6. அது த்யானித்தது (சாந்தோக்ய).

7. இந்த தேவதையே த்யானித்தது (சாந்தோக்ய).

8. லோகங்களை ஸிருஷ்டிசெய்யக்கடவே னென்று அது எண்ணிற்று (ஐத்ரேய).

9. நித்யமான வஸ்துக்களுக்குள் நித்யமா யும், சேதனமான வஸ்துக்களுக்குள் சேதனமா யும், அது ஒன்றுளாலும் பலருடைய விருப்பங் களைப்பூர்த்திசெய்கிறது (கடோபநிஷத், ச்வேதா ச்வதர).

10. சைதன்யனும் சைதன்யனல்லாதவ

னும் ஈச்வரனும் ஈச்வரனல்லாதவனும் இவ்விரு வரும் பிறப்பற்றவர்கள் (ச்வேதாச்வதர).

11. பாபம், மூப்பு, சாவு, துயரம், பசி, தாஹம் என்பவை இந்த ஆத்மாவிற்குக் கிடையாது (சாந்தோக்ய).

12. அவருக்குப் பயந்து காற்று அடிக்கிறது....இந்த ப்ரஹ்மானந்தத்தை அறிகிறவன் யாதொன்றிற்கும் பயப்படான் (தைத்திரீய)

13. ஸர்வக்ஞனை ப்ரஹ்மத்துடன் முக்தனும் அவருடைய ஸகல கல்யாண குணங்களை யும் அடைகிறான் (தைத்திரீய).

14. நான் பலவாயிருக்கக்கடவேன்; பிறக்கக்கடவேன் (தைத்ரீய).

15. யார் உள்ளே ப்ரவேசித்திருக்கிறானோ, யார் பிறந்த ஸகல வஸ்துக்களுக்கும் அதிபதியாயிருக்கிறானோ, யார் ஸகலத்திற்கும் ஆத்மாவாயிருக்கிறானோ (தைத்திரீய ஆரண்யகம்).

16. யார் ஆத்மாவில் வஸித்துக்கொண்டு ஆத்மாவினுள் இருக்கிறானோ, யாரை ஆத்மா அறியாதோ, யாருடைய சரீரம் ஆத்மாவோ, யார் ஆத்மாவின் உள்ளிருந்து அதை ஏவுகிறானோ, அவன் அமிருதஸ்வரூபனை உன் ஆத்மாவும் அந்தர்யாமியுமாகிறான் (பிருஹதாரண்யக).

17. யாருக்கு பிருதிவி சரீரமோ, யார் பிருதிவிக்குள் ஸஞ்சரித்துக்கொண்டிருக்கிறுனே, யாரைப்ருதிவி அறியாதோ, அவன் ஸர்வ பூதங்களுக்கும் அந்தராத்மா, பாபமற்றவன், தேஜோமயனுன தேவதை, ஒருவனுன நாராயணன் (ஸுபாலோபநிஷத்).

18. ஸகல ப்ரபஞ்சத்தையும் ஸிருஷ்டித்து அதே ப்ரபஞ்சத்தில் அவன் ப்ரவேசித்தான் (தைத்திரீய).

19. ஒரே தேவதை ஜீவாத்மாவையும் நாசமடையும் பிரகிருதியையும் ஆளுகிறது (ச்வேதாச்வதர).

20. இந்திரியங்களுக்கு அதிபதியான ஜீவாத்மாவிற்கு அவரே அதிபதி அவரே காரணம் அவரை உண்டுபண்ணினவனுவது அவருக்கு அதிபதியாவது கிடையாது (ச்வேதாச்வதர);

21. ஜீவாத்மாக்களுக்கு அவர் ப்ரபு; சாச்வதமானவர். மங்களஸ்வரூபி, விகாரமற்றவர் (மஹாநாராயண).

22. அனுபவிக்கிறவரையும் அனுபவிக்கப்படும் பதார்த்தத்தையும் ஏவுகிறவனேயும் அறிந்து (ச்வேதாச்வதர).

23. இரண்டு பக்ஷிகள் ஓர் அசுவத்த விரு

கூடத்தில் வாழ்கின்றன. அவைகளில் ஒன்று அதின் மதுரமான பழத்தைத் தின்கிறது. மற்றொன்று தின்காமல் தேஜஸால் விளங்குகிறது (ச்வேதாச்வதர).

24. ப்ரக்ருதி புருஷனென்ற இவ்விரண்டும் அநாதியென்றறி (கீதை. 13).

25. நானேயான ஜீவாத்மாவுடன் இந்த மூன்று தேவதைகளிலும் ப்ரவேசித்து, நாமரூப பேதங்களை உண்டாக்கக்கடவேன் (சாந்தோக்ய)

26. ப்ரபஞ்சத்தில் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹார கார்யங்களைத் தவிர முக்தஜீவர்கள் ஈச்வரனுடைய மற்ற சக்திகளைப் பெறுகிறார்கள். (ப்ரஹ்மஸூத்ரம் IV. 4).

27. ஜீவாத்மாவிற்கும் பரமாத்மாவிற்கும் ஆனந்தானுபவத்தில் மாத்ரமே உவமையுண்டு. (ஷை ஷை).

28. ப்ரஹ்மம் முக்தர்களால் ஸமீபித்து அடையப்படும் வஸ்து. (ஷை 1. 3).

29. இங்கிருந்து புறப்பட்டுப் போகிறவர்கள் பரமாத்மாவையும் நித்யமான அவருடைய கல்யாண குணங்களையும் அறிந்த பிறகு ஸகல லோகங்களிலும் தடையற்று ஸஞ்சரிக்கிறார்கள் (சாந்தோக்ய).

30. முக்தஜீவன் ஆனந்தமயமான ஆத்மாவை அடைந்து, இஷ்டமானவைகளை அநுபவித்துக்கொண்டு, இஷ்டமான ரூபத்தை எடுத்துக்கொண்டு, ஸகல லோகங்களிலும் ஸஞ்சரிக்கிறான் (தைத்திரீய).

31. ப்ரஹ்மஞானி புண்யத்தையும் பாபத்தையும் உதறிவிட்டுக் களங்கமற்றவனாய், ஸாத்யமானவரையில் ப்ரஹ்மத்திற்கு உவமையை அடைகிறான் (முண்டகோ).

32. பரஞ்ஜோதியை ஸமீபித்து முக்தஜீவன் தன் ஸ்வய ரூபத்துடன் விளங்குகிறான். (சாந்தோக்ய)

33. அறிகிறவனுடைய ஞானம் அழிகிறதில்லை (பிருஹதாரண்யக).

இவைபோன்ற மற்ற ச்ருதிகளுக்கு ஸ்ரீமத் ராமாநுஜாசார்யர் வேதாந்த ஸங்க்ரஹமென்ற க்ரந்தத்தில் விஸ்தாரமாய் வ்யாக்யானஞ்செய்திருக்கிறார்.

முக்தி விஷயத்தில் அத்வைதிகள், ஸாலோக்ய ஸாரூப்ய ஸாமீப்ய ஸாயுஜ்யமென்ற நான்கு விதங்களை ஒப்புக்கொண்டாலும், அவை கார்ய ப்ரஹ்மத்தைச் சேர்ந்ததென்றும் மாயாகல்பிதமென்றும் பந்தமுமில்லை முக்தியுமில்லையென்றும்

வாதிக்கிறார்கள். ஆனால் ஜீவன் மாயாகல்பிதமான ப்ரபஞ்சத்தைத் தள்ளித், தான் ப்ரம்மமென்றறிந்து, அக்கினியில் போட்ட கற்பூரத்தைப் போலவும் ஜலத்தில் கரைத்த உப்பைப்போலவும் அதனுடன் கலந்துவிட்டால், பிறகு முக்தியின் அனுபவத்தையும் ஜீவேச்வர ஐக்கியத்தையும் முக்தியடையாத ஜீவகோடிகளுக்கு உபதேசிப்பது யார்? அகண்டாகார ஸ்வரூபத்தில் கலந்த ஜீவன் மறுபடி தன்னைப் பிரித்துக்கொண்டு எப்படி வரமுடியும்? அப்படியில்லாவிட்டால் விதேஹ முக்தியும் பாரமார்த்திக தசையும் உண்டென்பதற்கு நமக்கு என்ன ப்ரமாணம்? ராமாகிருஷ்ணாதி அவதாரங்களும் வஸிஷ்ட வாமதேவ வ்யாஸ பராசராதி ரிஷிகளும் பூர்ண முக்தியடைந்தவர்களா. அல்லவா? அடைந்தவர்களானால் மறுபடியும் எப்படி அத்வய பரிபூரண அகண்டாகார ஸ்வரூபத்திலிருந்து தங்களைப் பிரித்துக்கொண்டு நமக்கு உபதேசிக்க வந்தார்கள்? பூர்ண முக்தர்களல்லவென்றால்,ஜீவேச்வர ஐக்கியானுபவமும் அகண்டாகார விருத்தியனுபவமும் அவர்களுக்கில்லையே. அதை தங்களுடைய ஸ்வானுபவமென்று பிறர்க்கு உபதேசிக்கமுடியாதே.

## விசிஷ்டாத்வைதம்

மேற்சொன்ன பதவிகளை வாஸ்தவமென்று கொள்ளும் விசிஷ்டாத்வைதிகளுக்கும் த்வைதிகளுக்கும் சிறிதுபேதமுண்டு. முக்தியடைந்த ஜீவன்கள் எல்லோருக்கும் மோக்ஷானந்தத்தின் அநுபவம் ஒரே விதமென்று விசிஷ்டாத்வைதிகளின் கொள்கை. ஒவ்வொரு ஜீவனுக்கும் அவனுடைய ஸ்வரூபத்திற்குத் தகுந்தபடியே மோக்ஷானந்தத்தின் அநுபவமும் ஏற்படுமென்பது த்வைதிகளின் கொள்கை. அனந்த கல்யாணகுண பரிபூர்ணனாய் விளங்கும் ஸர்வேச்வரனுடைய ஆனந்தமும், அனந்தகோடி காலம் ஜீவனாய் அக்ஞானத்தில் உழன்று கொண்டிருந்து ஞானோதயமாய் மோக்ஷத்தையடைந்த ஜீவன் அநுபவிக்கக்கூடிய ஆனந்தமும் ஒன்றேயென்று சொல்வது ந்யாயத்திற்கு ஒத்ததல்ல. ஆனந்தாநுபவத்தில் ஒரே விதமான யோக்யதையுள்ள ஜீவர்கள் அதற்கு முன்னும் ஸ்வரூபத்திலும் யோக்யதையிலும் ஸம்ஸார காலத்தில் ஒரே ரீதியாயிருக்கவேண்டும். அப்படியில்லாமல் வெவ்வேறு விதமான கர்மங்கள் ஒரே பலனைக் கொடுக்குமா? மேலும் ஓர் குரு தன் சிஷ்யனுக்கு ஒரு க்ரந்தத்தை உபதேசிக்

கிறார். அவன் அதைக் கற்று அதில் நிபுணனாகி றான். அதினால் அவனுடைய ஞானம் குருவி னுடைய ஞானத்திற்கு ஸமமாகுமா? மேலும், ஒரே விதமான ஸ்வரூபத்தையும் யோக்யதையை யும் பலானுபவத்தையுமுடைய ஜீவகோடிகள் பலவல்ல, ஒன்றேயென்று சொல்லவேண்டும். அது விசிஷ்டாத்வைதிகளுக்கு ஸம்மதமாகாது. மேலும், நித்யஸூரிகள் நித்யமுக்தர்க ளென்று சொல்லப்படும் அனந்த கருட விஷ் வக்ஸேனர் முதலியவர்களுக்கும், லோகமாதா வான லக்ஷ்மிக்கும், பரமாத்மாவிற்கும், இப் பொழுது ஸம்ஸாரத்திலிருந்து விடுபட்டு முக்தி யடைந்த ஜீவனுக்கும் ஆனந்தானுபவத்தில் சற் றும் பேதமில்லையென்றால், சக்தியிலும் பேத மில்லை. ஆகையால் இவையெல்லாம் ஒன்றேயா கும். ஈச்வரன் வேறு, லக்ஷ்மீ வேறு, நித்ய ஸூரிகள் வேறு, முக்தர்கள் வேறு, பத்தர்கள் வேறு என்ற கொள்கைக்குப் பங்கம் நேர்ந்து, எல்லாம் ஒன்றேயென்ற அத்வைதவாதமும், காணப்படும் பேதமெல்லாம் மாயாகல்பிதமென்ற ஸித்தாந்தமும் நிலைபெறும். இதுவும் விசிஷ்டாத் வைதிகளுக்கு இஷ்டமாயிராது.

இந்த மூன்று மதங்களும் வெகு தூரம் வரை யில் ஒரே விதமான கொள்கையை அனுஸரிக்

... UPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
... MADRAS ...

கின்றன. ஆனால் சதுர்முக ப்ரஹ்மாவிற்கு எட்டுகிறபொழுது, அத்வைதிகள் கார்ய ப்ரஹ்மமென்றும் காரணப்ரஹ்மமென்றும் இரண்டை ஏற்படுத்தி, மாயையால் யாவற்றையும் இல்லையென்று ஒழித்து, மிஞ்சின சூன்யத்தையே காரணப்ரஹ்மமென்றும், அது சித்ஸ்வரூபமானாலும் ஒன்றையும் அறிகிறதில்லை, ஆனந்தஸ்வரூபமானாலும் அது ஆனந்தத்தை அனுபவிக்கிறதில்லை, செய்கையுமில்லை, ப்ரகாசரூபமானாலும் ஒன்றையும் ப்ரகாசிப்பிக்கிறதில்லையென்று, கேவலம் ஜட பதார்த்தத்திற்கும் மட்டமாய் அதைச் செய்து விடுகிறார்கள்.

“ஜீவன் கேவலம் தோற்றமே, மாயாகல்பிதமே, அகண்டாகார ஸ்வரூப ஸமுத்ரத்தில் ஓர் அலையே. அலையின் நுனியிலிருக்கும் நுரையே ஜலத்தின் மாறுதலாய் ஜலத்துடன் ஒன்றும் ஜலத்துடன் கலக்கும். ஜீவனுக்கு இருப்பிடமாவது ஆகாரமாவது ஸத்தையாவது கிடையாதெ”ன்பது அத்வைதவாதம். இவ்விஷயத்தில் மூன்று மதாசார்யர்களும் ஆதாரமாய்க் கொள்ளும் ப்ரஹ்மஸூத்ரங்களில் சில வாக்யங்கள் காணப்படுகின்றன. அவை ஜீவாத்மாக்கள் அணுரூபிகளென்று உபதேசிக்கின்றன. ஆனால் இந்த

ஸூத்ரங்கள் யாவும் அத்வைதக் கொள்கையல்லவென்றும், இதர மதங்களின் கொள்கையேயென்றும், அதை விஸ்தாரமாய்ப் பூர்வபக்ஷ ரூபமாய் எடுத்துரைத்து பிறகு கண்டிக்கிறாரென்றும் சங்கரபாஷ்யம் சொல்லுகிறது. மற்ற இரண்டு பாஷ்யங்களோ இந்த ஸூத்ரங்களைப் பூர்வபக்ஷமென்று கொள்ளாமல் ஸித்தாந்தமேயென்றும் வேதவ்யாஸருடைய உண்மையான கொள்கையென்றும் சொல்லுகின்றன. சங்கர பாஷ்யத்தையும் ஸ்ரீபாஷ்யத்தையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த திபோவென்ற மேற்றிசை வித்வான் இவ்விஷயத்தில் சொல்லியிருக்கும் வாக்யங்கள் கவனிக்கத்தக்கவை. "பூர்வபக்ஷத்தை எடுத்துரைப்பதில் இவ்வளவு விஸ்தாரமாயும் காரணங்களுடனும் ஆக்ஷேபங்களுக்கு உத்தரங்களுடனும் சொல்வது வழக்கமல்ல. ஸித்தாந்த வாக்யங்களுக்கே இக்குணங்கள் பொருந்தும். மேலும், ப்ரஹ்மஸூத்ரங்களில் எவ்விடத்திலாவது பூர்வபக்ஷ வாக்யங்களுக்கு இவ்வளவு மேன்மையும் விரிவுரையும் கொடுக்கப்படவில்லை. ஆகையால் இந்த ஸூத்ரங்கள் பூர்வபக்ஷமென்றும் பின்னால் கண்டிக்கப்படுகின்றனவென்றும் நாம் அர்த்தஞ்செய்வது பொருந்தாது.

மதத்தின் பரம முக்யமான கொள்கைகளை எடுத்துரைத்து ஆக்ஷேபங்களைக் கண்டித்து ஸித்தாந்தங்களை நிலைநாட்டினதென்பதில் ஸந்தேஹமில்லாமல் நாம் எண்ணலாம். மேலும், இவ்விதமாய் இன்னும் சிலவிடங்களில் விசிஷ்டாத்வைதிகள் ஸித்தாந்த ஸூத்ரங்களென்பதைச் சங்கரபாஷ்யம் பூர்வபக்ஷ ஸூத்ரங்களென்று வாதிக்கிறது. அதுவும் மேற்சொன்ன தோஷத்திற்குட்பட்டதே.

இன்னுமொரு விஷயம். ப்ரஹ்மஸூத்ரங்களைப் பக்ஷபாதமின்றி மதத்வேஷமின்றி நடுநிலையான மனஸுடன் படிப்பவர்களுக்கு, சங்கரபாஷ்யத்தில் காணப்படும் காரணப்ரஹ்மம் கார்யப்ரஹ்மமென்ற பேதமும், ப்ரபஞ்சம் மித்யை, ஜீவனும் ப்ரஹ்மமும் ஒன்றேயென்ற கொள்கைகளும் ஸ்ரீவேதவ்யாஸருடைய மதமல்லவென்று புலப்படும். என் அபிப்ராயமும் அப்படியே" யென்கிறார்.

## த்வைதம்.

ஜீவன்கள் முக்தியோக்யர்களென்றும் தமோயோக்கியர்களென்றும் நித்ய ஸம்ஸாரிகளென்றும் மூவகையென்று த்வைதிகளின் கொள்கை. அதாவது, ஜீவன்கள் ஸ்வபாவத்தாலும் ஸ்வரூபத்

தாலும் பரஸ்பர பேதமுள்ளவர்கள். சிலர் ஸ்வபாவத்தாலேயே கெட்டவர்கள்; சிலர் ஸ்வபாவத்தாலேயே நல்லவர்கள்; சிலர் ஸ்வபாவத்தாலேயே இரண்டிற்கும் நடுநிலையுள்ளவர்கள். முதலாவது வகுப்பினர் அந்தந்தமமென்ற அதோகதியை அடையவேண்டியதென்றே பகவானால் நிச்சயிக்கப்பட்டவர்கள். இரண்டாவது வகுப்பினர் உத்தமமான முக்தியை அடையவேண்டியவர்களென்றே பகவானால் ஆதியிலேயே நிச்சயிக்கப்பட்டவர்கள். மூன்றாவது வகுப்பினர் அந்தந்தமமிற்கும் போகாமல் வைகுண்டத்திற்கும் போகாமல் கர்ம லோகத்திலேயே பிறப்பிறப்புகளை அநுபவித்துக்கொண்டு எப்பொழுதும் திரிந்துகொண்டிருப்பவர்கள். இதற்கு ஓர் காரணம் சொல்லப்படுகிறது. ப்ரபஞ்சத்திலுள்ள ஸகல பதார்த்தங்களும் ஸத்வம் ரஜஸ் தமஸென்ற முக்குணங்களை யுடையவை. ஆனால் இவைகளில் ஏதாவதொன்று, மற்ற இரண்டைவிட மேல் நாடியிருக்கும். அதே அதின்ஸ்வபாவம். அதைப்போன்ற இதர பதார்த்தங்களுக்கும் அவைகளுக்கும் ஒற்றுமையும் சேர்க்கையும் இதர குணங்களை ப்ரதானமாயுடைய பதார்த்தங்களிடத்தில் வெறுப்பும் பிரிவும் காணப்படுவதுபோல், ஜீவன்களும்

யென்றும் நியமிப்பாரா? அப்படிச் செய்வதற்கு என்ன காரணம்? இந்தபேதத்தைப் பெறக் கூடிய யோக்யதை அவர்களுக்கிருந்ததென்றால் இந்த பேதம் அநாதியென்று சொல்வதெப்படி? இப்படிச் செய்வதால் அவருக்கென்ன ப்ரயோஜனம்? தனக்கு முக்தி கிடைப்பது நிச்சயம். தான் முக்திக்கு யோக்யமானவர்களில் தாகல் செய்யப் பட்டவனென்ற எண்ணங்கொண்ட ஜீவன் யாதொரு ப்ரயத்னத்தையும் செய்யவேண்டியதில்லையே. வேதசாஸ்த்ர இதிஹாஸ புராண ஸ்ம்ருதி சாதனங்களாலும் ஆசார்யர்களாலும் பகவத் அவதாரங்களாலும் அவனுக்காக வேண்டியதென்ன? வைகுண்டத்தில் அவர்களுக்கு இடம் எப்பொழுதும் ஏற்பட்டிருக்கிறது; ஆகையால் முக்தியோக்யர்களுக்கு கர்மயோகம் பக்தியோகம் ஞானயோகம் அஷ்டாங்கயோகம், 32 வித்யைகள், உபாஸனைகர்மங்கள் இவை யாவும் அநாவச்யம்; அவர்களுக்காக ஏற்படவில்லை. ஸ்வபாவத்தாலும் ஸ்வரூபத்தாலும் எப்பொழுதும் அநந்தமஸென்ற அதோகதியை அடையவேண்டியவர்களென்று ஏற்பட்ட ஜீவகோடிகள் கருணாமூர்த்தியான பகவானால் அதில் சேர்க்கப்பட்டவர்கள். மேற்சொன்ன ஸாதனங்களில் ஒன்றையும் அநுஷ்டிப்பதில் அவர்களு

க்குப்ரயோஜனமில்லை; அனுஷ்டிக்கவும் மாட்டார் கள். எவ்வளவு கஷ்டப்பட்டும் அநேகாக நிச்சயமென்று ஏற்பட்டபிறகு, ஈச்வரனையும் வேத சாஸ்த்ரங்களையும் ஆசார்யர்களையும் பற்றி அவர் கள் அடையவேண்டியதென்ன? ஆகையால் அவர் களுக்கு மஹாவிஷ்ணு, பகவத் அவதாரங்கள் மோக்ஷஸாதனங்கள் யாதொன்றும் அவச்ய மில்லை. பவஸாகரத்தில் ஆழ்ந்து அதிலேயே அடிபட்டுக்கொண்டு ஒருநாளும் அதிலிருந்து கரையேறுவதில்லையென்று பரமாத்மாவால் நியமிக்கப்பட்ட நித்யஸம்ஸாரிகளுக்கும் மேற் சொன்ன ஸாதனங்களால் ப்ரயோஜனமில்லை. இப்படி எந்த ஜீவனுக்கும் ப்ரயோஜன மில்லாத கர்மகாண்ட ஞானகாண்ட உபா ஸனகாண்டங்களடங்கிய ச்ருதியும், ஸதாசார த்தைப் போதிக்கும் ஸ்ம்ருதியும், பகவானுடைய அவதார மஹிமையையும் கார்யங்களையும் பாப புண்யங்களை அனுஷ்டித்துக் காட்டி ஸுகதுக்கங் களை அடைந்த ஜீவன்களின் உபாக்யானங்களையும் விவரிக்கும் இதிஹாஸ புராணங்களும் மதங்களும் மதாசார்யர்களும் ஆலயங்களும் விக்ரஹங்களும் புண்ய தீர்த்தங்களும் ஸ்தலங்களும் வ்ரதோப வாஸாதி நியமங்களும் யாவும் முற்றிலும் நிஷ்

பலமே. ப்ரபஞ்ச வ்யவஹாரமென்பது ஜீவர்களுடைய கர்மமும் அவைகளின் பலத்தை அனுபவிப்பதேயாகையாலும், அதைத் தவிர வேறில்லையாகையாலும் அக்கர்மங்களைச் செய்தும் ப்ரயோஜனமில்லை. செய்வதால் உண்டாகும் பலன் அனுதியாய் ஏற்பட்டிருக்கிறது என்று தெரிந்த பிறகு கர்மமும் பலானுபவமும் இருக்க ந்யாயமில்லை. அப்பொழுது ப்ரபஞ்சமென்பது எங்கே? இதில் மற்றொரு விசித்ரமென்னவென்றால், முக்தியோக்யர்களென்று பரமாத்மாவால் குறிப்பிடப்பட்ட ஜீவன்கள் யார்? அவர்களின் லக்ஷணமென்னவென்று விசாரிக்குமளவில், ஸ்ரீமன் மத்வாசார்யரால் உபதேசிக்கப்பட்ட த்வைத மதத்தை அவலம்பித்த த்வைதிகளேயென்று சொல்லப்படுகிறது. அப்படியானல் ஸ்ரீமான் மத்வாசார்யரால் ஸுமார் 800 வருஷங்களுக்கு முன்பு உபதேசிக்கப்பட்ட த்வைதமதம் லோகத்தில் விளங்குவதற்கு முன்னிருந்த ஜீவர்களுடைய கதியென்ன? அவர்களெல்லோரும் தமோயோக்யர்களா? த்வைதமதத்தை ஆதியிலேயே வெளிப்படுத்தியிருந்தால் அதில் சேர்ந்திருப்பார்களே. அப்படி வெளிப்படுத்தாதது அவர்களுடைய தோஷமல்லவே. மேலும் மத்வாசார்யர்

லோகத்தில் ஏதோ ஒரு மூலையில் பிறந்து வளர்ந்து காலங்கழித்தவர். அதே காலத்தில் லோகத்தின் மற்ற பாகங்களிலுள்ள ஜீவன்கள் அவருடைய மதோபதேசத்தைக் கேட்கமுடியாது. முக்திக்கு மார்க்கத்தை உபதேசிக்க வந்தவர் லோகமுழுவதும் எல்லா ஜீவர்களுக்கும் பக்ஷபாதமின்றி உபதேசித்திருக்கவேண்டும். அப்படிச் செய்யாதது அவர்களுடைய குற்றமல்ல. அதற்காக ஈச்வரன் அவர்களைத் தண்டிப்பதும் ந்யாயமல்ல. மேலும் பரிபூர்ணனை பகவானிடத்தில் பக்ஷபாதமும் இரக்கமின்மையும் இருக்க முடியுமா? ஜீவன்களை இப்படிப் பிரித்துப் பலன்களை அனுபவிக்கச்செய்வது வைஷம்யத்தையும் இரக்கமின்மையையும் காட்டவில்லையா? அப்பொழுது பகவானுடைய கிருபையென்பதும் அதை அடையஜீவன் முயலவேண்டுமென்பதும், அதனால் ஸகல குறைகளும் நீங்கி உத்தமகதியை அடைகிறானென்பதும் பரிஹாஸவார்த்தையாகும். இதைப் போன்ற இன்னுமநேக காரணங்களால் த்வைத மதத்தில் ஏற்படும் ஜீவத்ரைவித்யமென்ற மூவகை ஒவ்வாததே. ஜீவர்களுக்குள் பரஸ்பர பேதமுண்டென்பதையும் அந்த பேதத்திற்குத் தகுந்தபடியே பலமும் கிடைக்குமென்பதையும் மாத்ரம் ஒப்புக்கொள்ளலாம்.

## ஓர் ப்ரமை

பௌத்த மதத்தையும் அதினால் விளையும் கேட்டையும் நாசஞ்செய்யவே சங்கராசார்யர் அவதாரஞ்செய்தாரென்றும் குமரிலபட்டருடன் சேர்ந்து பௌத்தர்களைப் பலவிதமாய் ஹிம்ஸித்து அழித்தாரென்றும் பெரும்பாலும் நமது தேசத்தில் பண்டித பாமரர்களால் எண்ணப்படுகிறது. தற்கால மடாதிபதிகளும் இதையே தங்களுடைய பிருதாகச்சொல்லிக் கொள்ளுகிறார்கள். இக் கருத்து முற்றிலும் பிசகென்பதற்கு இங்கே சில காரணங்களைக் கூறுவோம்:—

1. ப்ரஹ்மஸூத்ரம் வேதவ்யாஸரால் இயற்றப்பட்டது; பகவத்கீதையில் அதைப்பற்றிச் சொல்லியிருக்கிறது. ஆகையால் பாரதயுத்த காலத்திற்கு முந்தியே அது செய்யப்பட்டிருக்க வேண்டும். இந்த யுத்தம் ஸுமார் 5000 வருஷங்களுக்கு முந்தி நடந்ததாய் ஒப்புக்கொள்ளப்படுகிறது. அந்த ஸூத்ரத்தில் காணப்படுவதாய்ச் சொல்லும் பௌத்தமத கண்டனமானது 2000 வருஷங்களுக்கு முந்தி பிறந்த கௌதம சாக்ய முனியால் உபதேசிக்கப்பட்ட பௌத்தத்தைக் குறித்ததல்ல; அவருக்கு முந்தியிருந்த புத்தமதாபாஸமே. ஆகையால் ப்ரஹ்ம

ஸௌத்ர பாஷ்யத்தில் காணப்படும் பௌத்தமத கண்டனம் கௌதமபுத்தரின் மதகண்டனமல்ல.

2. சங்கராசார்யர் தன் தனி க்ரந்தங்களில் ஓரிடத்திலாவது பௌத்தமதத்தைக் கண்டிக்கவில்லை. அதற்காகவே அவதாரஞ்செய்தவராயிருந்தால் அதைப்பற்றின அநேக க்ரந்தங்களை இயற்றியிருப்பார்.

3. மஹாவிஷ்ணு புத்தராய் அவதரித்து உபதேசித்த மதத்தை அவரே வ்யாஸராய் அவதரித்துக் கண்டித்தாரென்றும் அதையே பரமசிவன் சங்கரராயும் ஆதிசேஷன் ராமாநுஜராயும் முக்யப்ராணன் மத்வராயும் அவதரித்துக்கண்டித்தார்களென்பதும் ஒப்புக்கொள்ளத்தக்கதல்ல.

4. சங்கரர் ப்ரஸித்தியடைவதற்கு முன் காலம் சென்ற குமரிலரும் இவரும் சேர்ந்து புத்தர்களை அழித்தார்களென்பது ஸரியல்ல.

5 சங்கரர் புத்தருடைய நிர்வாணத்திற்கு 50-வர்ஷங்களுக்குப் பின் பிறந்திருந்தால்; அவ்வளவு சீக்ரத்தில் பௌத்தமதம் வடக்கிலிருந்து மலையாளம் வரையில பரவியிருக்காது; சீர்குலைந்துமிருக்காது. சங்கரர் A.D. 8.வது நூற்றாண்டில் பிறந்தாரென்றால், அக்காலத்தில் பௌத்த

மதம் இந்தியாவில் தானாகவே அழிந்து போய் விட்டது. அசோகனுடைய காலத்திற்குப் பிறகு (B.C. 3-வது நூற்றூண்டில்) பௌத்தமதத்திற்கு வர வர க்ஷீணதசையே. தானாகவே நாசமடைந்து கொண்டிருக்கும் மதத்தை அழிப்பதற்காக சங்கரர் அவதாரஞ் செய்யவேண்டியதில்லை; அதைக் கண்டிக்கவும் வேண்டியதில்லை.

6. அவருடைய பாஷ்யத்தில் காணப்படும் கண்டனத்தில் குறிப்பிட்டு இன்ன பௌத்தமத க்ரந்தத்தையாவது வாக்கியங்களையாவது கண்டிப்பதாய்ச் சொல்லப்படவில்லை. இந்தத் தப்பான எண்ணங்கொண்டு சங்கர பாஷ்யத்திற்குடீகை எழுதுகிறவர்கள் மாத்யமிகர் ஸௌத்ராந்திகர் வைபாஷிகர் யோகசாரரென்ற பௌத்தமத ப்ரவர்த்தர்களின் கொள்கைகளையே சங்கரர்கண்டித்திருக்கிறரென்று எழுதுவது கேவலப் பரிஹாஸத்திற்கிடமாகிறது. ஏனென்றல் இந்த நாலு மதங்களும் A. D. பல நூற்றூண்டுகளுக்குப் பிந்தியே திபேத் வட இந்தியா முதலிய தேசங்களில் உண்டாயின. புத்தருடைய காலத்திலாவது அதற்கு 50 வருஷங்களுக்குப் பிந்தின சங்கரருடைய காலத்திலாவது இவைகள் உண்டா

யிருக்க ந்யாயமில்லை. ஆகையால் சங்கராசார்யருக்கும் பௌத்தமதகண்டனத்திற்கும் யாதொரு ஸம்பந்தமுமில்லை.

ஆனால் அவர் எதற்காக அவதரித்தார்? அந்த கார்யத்தை எப்படி முடித்தார்? கீதையில் இரண்டாவது அத்யாயத்தில் சொல்லியிருக்கிறபடி, அக்காலத்திலேயே கர்மகாண்டம் பலப்பட்டு யாக யக்ஞம் முதலிய க்ரியைகளே ப்ரதானமாய் மோக்ஷமார்க்கமென்று கொண்டாடப்பட்டது. பக்தியும் ஞானமும் உபாஸனையும் மலினமடைந்தன. அந்த க்ரியைகளை எல்லையில்லாமல் பெருக்கி, மனிதனுடைய ஆயுள் முழுவதும் அதிலேயே கழியும்படி ஏற்படுத்தப்பட்டது. அதனால் எண்ணிறந்த ப்ராணிஹிம்சையும் க்ரூரஸ்வபாவமும் தம் கருத்திற்கு ஒவ்வாதவர்களிடத்தில் பரமத்வேஷமும் விருத்தியாயின.

இந்தக் கோரமான ஸ்திதியை நீக்குவதற்கும், கேவலம் கர்மத்திலேயே ஆழ்ந்து கிடந்தவர்களை அதிலிருந்து வெளியேற்றுவதற்கும், கர்மத்தைக் காட்டிலும் ஞானமே எவ்விதத்திலும் மேலானது, கர்மத்தாலாவதொன்றுமில்லை யென்ற கடுமையான ஔஷதத்தைக் கொடுத்தே அந்தப்

பிணியைத் தீர்ப்பதற்கும், ஸர்வேச்வரன் சாக்ய முனியாய் வட இந்தியாவில் அவதரித்து புத்தரென்ற ஞானநிலையை அடைந்து, "ப்ராணிஹிம்ஸையையும் அகங்காரத்தையும் பெருக்கும் கர்மங்களால் ஏதும் ப்ரயோஜனமில்லை. மனத் தூய்மையும் அன்பும் நல்லொழுக்கமுமே இன்றியமையாதவை"யென்று கர்மத்தைத் தூஷித்துக், கருணையையும் நன்னடத்தையையும் ப்ரதானமாய் உபதேசித்தார். இதே காரியத்திற்காகத் தென் இந்தியாவில் ஸ்ரீசங்கராசார்யராய் அவதரித்து, ஞானப்ரதானமான அத்வைத வேதாந்தத்தை லோகத்திற்கு உபதேசித்து, அதற்கு விரோதமான மதங்களை நாசஞ்செய்தார். இப்படி கேவல கர்மமார்க்கத்தின் கேடுகளையும் சாக்தம் முதலிய மதங்களின் ஆபாஸங்களையும் அக்ரமங்களையும் க்ரூரக்ருத்யங்களையும் திருத்தி, புத்த ரூபியாய் ப்ராணிஹிம்ஸையையும் துஷ்ட ஆசாரங்களையும் ஒழித்து, சங்கரரூபியாய் சுத்தமான ஞானமே மேலானதென்ற அத்வைத வேதாந்தத்தை உபதேசித்த கருணைக்கடலான பகவானே ஏறக்குறைய ஒரே காலத்தில் புண்ய பூமியான நமது ஆர்யா வர்த்தத்தில் அவதரித்துக் கீதையில் வாக்களித்தபடி துஷ்டர்களைச் சிக்ஷி

ந்து ஸாதுக்களைக் காப்பாற்றி ஸநாதன வைதிக தர்மத்தை நிலைநிறுத்தினரென்பதே ஸர்வஸம்மதமான ஸித்தாந்தமாகும்.

சுபமஸ்து.

The Swadesamitran Branch Press, Madras.

## சுதேசமித்திரன்.

தலைவர்களின் ஜீவிய சரித்திரங்கள்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| மகாத்மா காந்தி | 1 | 8 |
| சித்தரஞ்சனதாஸ் | 0 | 12 |
| அலிசகோதரர்கள் | 1 | 0 |
| சிவாஜி மகாராஜா | 1 | 0 |
| லாலாலஜபதிராய் | 0 | 8 |

## இராஜீய நூல்கள்.

| | | |
|---|---|---|
| ஸ்வராஜ்யம் | 0 | 8 |
| பஞ்சாப் துயரம் | 3 | 0 |
| பாரத ஜன ஸபை | 2 | 0 |
| முஸ்லீம் கிலாபத் | 0 | 4 |
| பொது விஷய விளக்கம் | 1 | 8 |

## புதிய நூல்கள்.

| | | |
|---|---|---|
| கதாமோகன ரஞ்சிதம் | 1 | 0 |
| கதா மாலிகா | 1 | 0 |
| கதா ரத்னம் | 0 | 12 |
| இரஞ்சித மாலா | 0 | 5 |
| வியாபார தந்திரம் | 1 | 8 |
| வர்த்தக யுக்தி | 0 | 6 |

*மானேஜர்,*

**சுதேசமித்திரன் ஆபீஸ், சென்னை.**